பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 26

ஞாயிற்றுக்கிழமை
22 டிசெம்பர் 2024

மார்கழி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## இலங்கைக்கு நிதி கிடைக்கும்

கொழும்பு, டிசெ. 22
நாணயநிதியத்தின் மூன்றாம்கட்ட நிதியுதவி எந்தத் தடங்கலும் இல்லாமல் இலங்கைக்குக் கிடைக்கும் 14



## ரணில் இன்று இந்தியா பயணம்

கொழும்பு, டிசெ. 22
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று இந்தி 14

## வடதாரகை இடையூறு!

» 06

ஹட்டனில் விபத்து:

## மூவர் பலி காயம் 40

» 02

மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு

## எந்தவொரு அழுத்தமும் வழங்கவில்லை இந்தியா

ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, டிசெம்பர் 22
மாகாணசபைத் தேர்தல் விவகாரத்தில் இந்தியா எந்தவொரு அழுத்தத்தையும் வழங்கவில்லை. ஆனால், மாகாணசபைத் தேர்தலை நடத்தி மாகாண அதிகாரங்களை உரிய தலைமைகளிடம் ஒப்படைக்க 15

இலங்கைக்கு நிதியுதவி

## வழங்குவதா? இல்லையா? நாணய நிதியம் ஆலோசனை

எதிர்வரும் வாரங்களில் முடிவு தெரியும்

கொழும்பு, டிசெ. 22
இலங்கைக்கு மூன்றாம் கட்ட நிதியுதவி வழங்குவதா இல்லையா என்பது தொடர்பாக, சர்வதேச நாணய நிதியத்தின்நிறைவேற்றுச்சபை இறுதிக்கட்டப் பரிசீலனை மேற்கொள்ளவுள்ளது.
சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் 14

# ஜனாதிபதியைக் கொல்லச் சதியா?

## விசாரணைகள் தீவிரம்!

குற்றப்புலனாய்வுப் பிரிவு தெரிவிப்பு

**கொழும்பு, டிசெம்பர் 22**
**ஜனாதிபதி அநுரவைக் கொல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதி தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.** 14

தெல்லிப்பழையில்

## சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுத்தினால் நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 22
தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தும் வகையில் வீதிகள், நீர் நிலைகள் மற்றும் பொது இடங்களில் கழிவுகளை 14



## சைக்கிள்கள் திருட்டு: கைதானார் இளைஞர்!

*12 சைக்கிள்கள் மீட்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 22
யாழ்ப்பாணம், வடமராட்சியின் பல்வேறு பகுதிகளில் சைக்கிள்களைத் திருடிய குற்றச்சாட்டில் இளைஞரொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
காங்கேசன் 14

## தவறான முடிவெடுத்து குடும்பத்தலைவர் பலி

பரிஸ், டிசெ. 22
பிரான்ஸ் தலைநகர் பரிஸில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரொருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம், மண்டைதீவுப் பகுதியைச் சேர்ந்த நல்லையா சத்தியானந்தன் (வயது-62) 14



## டிசெம்பரில் டெங்கு 91

யாழ்ப்பாணம், டிசெ. 22
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டிசெம்பர் மாதத்தில் மட்டும் 91பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். 14

மடு பிரதேச செயலகப் பகுதியில்

## மூன்று பேருக்கு பாம்பு தீண்டல்

மன்னார், டிசெ. 22
மன்னார், மடு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் கடந்த சில தினங்களுக்குள் பாம்பு தீண்டி மூவர் சிகிச்சை பெற்று வருகின்றனர். 14




'அப்ப இனியும் எல்லாத்தையும் போராடித்தான் வாங்கோணுமோ?'

## பொன்னாலை – பருத்தித்துறை வீதியை சீரமைக்கக்கோரி இன்று உணவுத்தவிர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 22
பொன்னாலை – பருத்தித்துறை இடையேயான 763 வழித்தட வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி வல்வெட்டித்துறையில் இன்று உணவுத் தவிர்ப்புப் 14

## மக்களின் போராட்டத்தை குழப்புவதற்கு அரசு சதி!

யாழ்ப்பாணம், டிசெ. 22
பொன்னாலை - பருத்தித்துறை வீதியைச் சீரமைக்குமாறு கோரி பொதுமக்கள் இன்று உணவுத் தவிர்ப்புப் போராட் 14

# சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 20 அடி பள்ளத்தில் பாய்ந்து பஸ் விபத்து

## மூவர் உயிரிழப்பு; 40 பேர் படுகாயம்

**ஹற்றன், டிசெ.22**

**ஹற்றன் - கண்டி பிரதான வீதியில் தனியார் பேருந்தொன்று பாதையை விட்டு விலகி சுமார் 20 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் மூவர் உயிரிழந்துள்ளனர். 40 க்கு மேற்பட்டவர்கள் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.**


இந்த விபத்து நேற்று இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 5 வயதுச் சிறுவனும், வயோதிபர்கள் இருவருமே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பேருந்துச் சாரதியின் கவனமின்மை காரணமாகவே இந்த விபத்து நேர்ந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பில் ஹற்றன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)



# ரஷ்ய உரம் தரமானது

கொழும்பு, டிசெ.22

ரஷ்யாவால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட மியுரேட் ஒப் பொட்டாஸ் உரம் தரமானது என விவசாய அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த உரத்தின் நிறம் தொடர்பில் விவசாயிகள் மத்தியில் அச்சம் ஏற்பட்டதையடுத்து இந்த உரத்தின் தரம் தொடர்பில் ஆராய்ந்த விவசாய அமைச்சின் மண் தொடர்பான விசேட நிபுணர் ரேணுகா சில்வா, அந்த உரம் தரமானது என உறுதிப்படுத்தியுள்ளார். (ச-இ)


# மியான்மர் படகின் மாலுமிகளுக்கு மறியல்

கொழும்பு, டிசெ.22

அண்மையில் முல்லைத்தீவு கடற்கரையில் மியான்மர் ஏதிலிகளுடன் கரையொதுங்கிய படகின் மாலுமிகள் 12 பேர் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் ஏனையவர்கள் மிரிஹானை தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

## தாமரைக்கோபுரம்

# பார்வையிடும் நேரம் நீடிப்பு



கொழும்பு, டிசெ.22

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு தாமரைக் கோபுரத்தினைப் பார்வையிடும் நேரம் நீடிக்கப்பட்டுள்ளதாக அதனை முகாமைத்துவம் செய்யும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, தாமரைக் கோபுரம் இம்மாதம் 25 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் நள்ளிரவு வரை பொதுமக்கள் பார்வைக்காக திறந்திருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பொருளாதார மேம்பாடு பிரிட்டன் கைகோர்ப்பு

கொழும்பு, டிசெ.22

பிரித்தானிய சந்தைக்கு இலங்கைப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு அதிகபட்ச ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பேட்ரிக் தெரிவித்துள்ளார்.

நிதி மற்றும் கொள்வனவு பிரதியமைச்சர் ஹர்ஷன சூரியப்பெருமவுடன் நேற்றுமுன்தினம் நிதியமைச்சில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, வர்த்தக வாய்ப்புகளை அடையாளம் காணும் நோக்கில் அடுத்த வருட ஆரம்பத்தில் வர்த்தகர்கள் குழுவொன்றும் இலங்கைக்கு விஜயம் செய்ய தயாராக இருப்பதாகவும் பிரிட்டன் தூதுவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## அரசாங்கத்தின் நிதியில்

# முன்னாள் அமைச்சர்கள் விமானப் பயணங்கள்

கொழும்பு, டிசெ.22

கடந்த காலங்களில், 15 முன்னாள் அமைச்சர்கள் இலங்கை விமானப்படையின் விமானங்களை பல்வேறு பயண மற்றும் போக்குவரத்து தேவைகளுக்காக பயன்படுத்தியதாக, இலங்கை விமானப்படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கக்கு அமைய இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சர்களின் போக்குவரத்து தேவைகளுக்காக 66 விமானங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதன்படி முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர பத்து விமானங்களையும் தயாகமகே ஒரு விமானத்தையும் பாட்டலி சம்பிக்க ரணவக்க 3 விமானங்களையும், ரவி கருணாநாயக்க 6 விமானங்களையும் வஜிர அபேவர்த்தன ஒரு விமானத்தையும் ராஜித சேனாரத்ன 3 விமானங்களையும், சாகல ரத்நாயக்க 3 விமானங்களையும் எம்.எச்.எம்.ஹலீம் ஒரு விமானத்தையும், ஜோன் அமரதுங்க ஒரு விமானத்தையும் அஜித் நிவாட் கப்ரால் 2 விமானங்களையும் ரொஷான் ரணசிங்க ஒரு விமானத்தை, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஒரு விமானத்தையும், நாமல் ராஜபக்ச 6 விமானங்களையும் சஜித் பிரேமதாஸ 25 விமானங்களையும் அலிசப்ரி 2 விமானங்களையும் பெற்று பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விமான பயணங்களில் பெரும்பாலானவை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. (ச-இ)

# நாடாளுமன்ற அதிகாரிகளிடம் சி.ஐ.டி.யினர் வாக்குமூலம்

கொழும்பு, டிசெ.22

நாடாளுமன்ற இணையத்தளத்தில் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்பாக கலாநிதி என்ற பட்டம் குறிப்பிடப்பட்டமை தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் சில நாடாளுமன்ற அதிகாரிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

இதன்படி, 7 அதிகாரிகளிடம் இவ்வாறு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை தாண்டிய மீன்பிடி மனிதாபிமானம் காட்டாதீர்

## கடலோடிகள் சங்க இணைப்பாளர் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், டிசெ.22**

**இந்தியாவிலிருந்து வந்து இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் விவகாரத்தில் மனிதாபிமானம் என்ற பேச்சே இருக்கக்கூடாது என வட மாகாண கடலோடிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளரும், இணைப்பாளருமான காத்தலிங்கம் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.**

வடமாராட்சியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லைதாண்டிய மீன்பிடியால் நாளாந்தம் எமது மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்து வாடுகின்றனர். அண்மையில் இந்தியாவுக்குச் சென்ற எமது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவில் பிரதமர் மோடியை சந்தித்தபோது எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் விடயம் மனிதாபிமானத்துடன் அணுகப்படும் என தெரிவித்திருந்தார்.

எமது மீனவர்கள் இயந்திரக் கோளாறு காரணமாக எல்லை தாண்டி சென்றதற்கே மியான்மரில் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டு ரூபா. 5இலட்சம் குற்றப்பணமும், கடூழிய சிறையும் விதிக்கப்பட்டது. இதேபோன்று இலங்கையில் எமது கடற்பரப்பிற்குள் மீன்பிடியில் ஈடுபடும் எவராக இருந்தாலும் அவர்களுக்குரிய தண்டனையில் மனிதாபிமானம் காட்டப்படக்கூடாது- என்றார். (ச- 27)

சிறிராம் ஜுவல்லர்ஸ்
புத்தாண்டை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான விசேட சலுகை
22 கரட் தங்க ஆபரணங்களுக்கான செய்கூலி சேதாரத்தில் 20 % - 50 % வரையிலான விலைக்கழிவு வழங்கப்படும்.
வாங்கும் அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ் வழங்கப்படும்
இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

077 165 1729, 077 773 0567, 021 222 8334

ஜனாதிபதி செயலணிகளில்

# சிறுபான்மையினரை உள்ளீர்க்க வேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ.22

ஜனாதிபதி செயலணிகளில் சிறுபான்மையினத்தவரின் பங்களிப்பு அவசியம் என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் ஜனாதிபதிக்கு கடிமொன்றை அனுப்பி வலியுறுத்தியுள்ளார்.

'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. இவ்வாறான செயலணிகளில் இலங்கையின் பல்லினத் தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியம். ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டுள்ள 18 பேர் அடங்கிய இந்தக் குழுவில் சிறுபான்மை இன மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் யாரும் உள்ளடக்கப்படவில்லை என்பது வருத்தத்துக்குரியது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (ச- 56)



கிளிநொச்சியில்

# மோப்ப நாய்களுடன் திடீர் சோதனை

கிளிநொச்சி, டிசெ.22

நத்தார் பண்டிகையை முன்னிட்டு கிளிநொச்சி போக்குவரத்துப் பொலிஸார் மோப்ப நாய்களுடன் நேற்று திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

மாவட்டத்தில் வீதி ஒழுங்குகளை மீறுபவர்கள், சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பாகவும் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மோப்ப நாய்கள் சகிதம் ஏ-9 வீதியில் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (ச-113)

# நாகை மீனவர்கள் மீது கடற்கொள்ளையர் தாக்கு

## 3 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களும் சூறையாடல்

கொழும்பு, டிசெ.22

நாகை மீனவர்கள் மீது கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியதில் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகி மூன்று மீனவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கோடியக்கரைக்கு தென்கிழக்கே நேற்று அதிகாலை மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு 2 படகில் வந்த 6 கடற்கொள்ளையர்கள் அவர்களது படகை வழி மறித்து மீனவர்களை கத்தி மற்றும் கட்டையால் தாக்கி விட்டு படகில் இருந்த 3 லட்சம் ரூபா மதிப்புள்ள மீன்கள், மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து வேதாரண்யம் கடலோர பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ச-56)

# மீன்களும் விலை உயர்வு

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மீன்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன்படி, ஒரு கிலோகிராம் கெலவல்ல மீனின் சில்லறை விலை 2,500 ரூபாவாக உயர்ந்துள்ளது. மேலும், ஒரு கிலோகிராம் பாரைமீன் 1,800 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் சாலை மீன் 560 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் மத்தி 1,020 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் லின்னா 980 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. இதேவேளை, பேலியகொடை மத்திய மீன் சந்தையின் மொத்த விலையும் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. (ச-56)

# முன்பள்ளியில் கலைவிழா

யாழ்ப்பாணம், டிசெ.22

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் இயங்கும் குட்டிச்சுட்டி முன்பள்ளிச் சிறார்களின் ஆண்டு இறுதிக் கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் சனசமூக நிலையத் தலைவர் து.சுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலகப் பதில் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ச-66)

# திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.22

இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் சனிக்கிழமை வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நாவற்குழி திருவாசக அரண்மனை சிவபூமி சிவதெட்சணாமூர்த்தி கோயிலில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் அடியவர்கள் முன் கூட்டியே 0779236552 எனும் வட்ஸ் அப் இலக்கத்துக்கு தங்கள் முழுப் பெயர், தொடர்பு இலக்கத்தை அனுப்பி ஒத்துழைக்குமாறு இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையினர் கேட்டுள்ளனர். (ச-66)

********

யாழ்ப்பாணம், டிசெ.22

நீர்வேலி செல்லக்கதிர்காமம் ஆலயத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை 4) காலை முதல் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு இடம் பெறவுள்ளது. (ச-66)

# உடுப்பிட்டி மதுசாலை வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.22

உடுப்பிட்டி, இமையாணன் மேற்கில் புதிதாகத் திறக்கப்பட்ட மதுபானசாலையை அகற்றக்கோரி உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த 32 பொது அமைப்புகள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு மேலதிக விசாரணைகளுக்காக எதிர்வரும் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் பொன்னுத்துரை கிரிசாந்தன் முன்னிலையில் கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# வாகன இறக்குமதி; பங்குச்சந்தை ஏற்றம்

கொழும்பு, டிசெ.22

வாகன இறக்குமதிக்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியதன் பின்னர் கொழும்பு பங்குச் சந்தையில் கணிசமான அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதன்படி நேற்றுமுன்தினம் அனைத்து பங்குகளும் 156.4 வீதத்தினால் பெறுமதி அதிகரிப்பை காட்டியுள்ளன. அதன் பிரகாரம் சுட்டியொன்றின் பெறுமதி 14,810 ஆகப் பதிவாகியுள்ளது.

அண்மையில் வாகன இறக்குமதிக்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியதன் பின்னர், முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக்கையொன்று ஏற்பட்டுள்ளதன் காரணமாக பங்குச் சந்தை சடுதியாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# இந்திய ஒப்பந்தங்கள் வெளிப்படை தேவை

## ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு, டிசெ.22

இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எட்கா உள்ளிட்ட சில ஒப்பந்தங்களை ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் செய்யும்போது எதிர்ப்புத் தெரிவித்து வந்த மக்கள் விடுதலை முன்னணியே தற்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அந்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளதாக தெரியவருகிறது.

அதற்மைய இந்தியாவுடன் அரசாங்கம் ஏற்படுத்திக்கொண்டுள்ள இணக்கப்பாடுகளை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். அதேநேரம் எட்கா தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதை தெரிவிக்க வேண்டும் - என்றார். (ச-இ)




# மொட்டுக் கட்சி தேசிய அழைப்பாளராக டி.வி. சானக

கொழும்பு, டிசெ.22

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புதிய தேசிய அழைப்பாளராக டி.வி. சானக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் விஜேராம இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்குழுக் கூட்டத்திலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு

கொடிகாமம், டிசெ.22
சாவகச்சேரி பிரதேசசபையின் மிருசுவில் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசில் நாள் நிகழ்வு சாவகச்சேரி பிரதேசசபையின் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வின் கௌரவ விருந்தினராக கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சு.ரவிவர்மா கலந்து கொண்டார். (ச-22,159)



## வடதாரகையால் அசௌகரியம்

யாழ்ப்பாணம், டிசெ .22
நெடுந்தீவில் தரித்து விடப்பட்டுள்ள 'வடதாரகை' படகால் சிரமங்களை எதிர்நோக்குவதாக பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
வடதாரகை படகு பழுதடைந்த நிலையில், கடற்படையினரால் அண்மையில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் ஒழுங்குமுறையின்றி தரித்து விடப்பட்டுள்ளது.
இதனால் வயோதிபர்கள் உட்பட பயணிகள் சுமுகமான முறையில் இறங்கு துறைக்குச் சென்றுவர முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே குறித்த படகை ஒழுங்குமுறையில் தரித்துவிடுவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச- 25,125)

## மாவாப் பாக்குடன் வயோதிபர் கைது




யாழ்ப்பாணம், டிசெ.22
சங்கானை நகரப் பகுதியில் மாவாப் பாக்குடன் வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விசேட ரோந்து நடவடிக்கைகளின் போது சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய போதே 66 வயதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கினை தாக்கல் செய்ய மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-125)

## மரக்கறிகளின் விலை உச்சம்



யாழ்ப்பாணம், டிசெ.22
மரக்கறிகளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் இதனால் நுகர்வோர் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
தற்போது விநாயகர் விரதகாலம் இடம்பெற்று வருவதாலும் அண்மையில் பெய்த கனமழையாலும் மரக்கறி பயிர்ச்செய்கை பாதிப்படைந்தமையாலும் அவற்றின் விலை சந்தையில் உயர்ந்துள்ளது. கத்தரிக்காய், பாகற்காய், பயிற்றை, வெண்டி, பச்சை மிளகாய் உள்ளிட்ட பல மரக்கறிகளின் விலையே சடுதியாக உயர்வடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-25, 17)





## மடிச்சுக்கட்டி கட்டுப்படுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ.22
யாழ்.குடாநாட்டு வயல்களில் பரவலாகக் காணப்படும் மடிச்சுக்கட்டி நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். வயல்களில் நோயைக்கட்டுப்படுத்த விவசாயிகளால் மருந்து விசிறப்பட்டு வருகிறது. (ச-25,17)

## மார்கழி இசைவிழா

யாழ்ப்பாணம், டிசெ.22
யாழ். இந்தியத் துணைத்தூதரகம், நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டு கலைக்கூடல், யாழ். வணிகர் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், மார்கழி இசைவிழா யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், எதிர்வரும் 27 ஆம்திகதி வெள்ளிக்கிழமை, 28 ஆம் திகதி சனிக்கிழமை, 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய 3 தினங்களும் மாலை 4.45 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-25, 10)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி, டிசெ.22
மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகத்தின் எதிர்கால நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல், காப்பகத்தின் தலைவர் தேவராசா தீபன் தலைமையில் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
கலந்துரையாடலில் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் குடும்ப உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (ச-25, 27-113)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பிள்ளைகள் வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. மாலையில் வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**இடபம்:** பிற்பகலுக்கு மேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். திடீர் செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**சிம்மம்:** ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர் செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். வாழ்க்கைத்துணை வழி உறவுகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக் கூடும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மாலையில் வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக அமையும்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**விருச்சிகம்** : தந்தை வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். இன்று எதிலும் சற்று பொறுமையுடன் செயல்படவேண்டிய நாள். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மகரம்:** இன்று எதிலும் சற்று பொறுமையுடன் செயல்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும்.

**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் பணிச்சுமை குறையும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

எந்த இடத்தில் வசதியாக உணர்கிறீர்களோ, அந்த இடத்தை விட்டு விலகிச் சென்று புதியவற்றைத் தேடத் தொடங்குங்கள். அதுவே உங்களை வெற்றியாளராக உருவாக்கும்.

– வால்ட் டிஸ்னி –

# எல்லாமும் பணமா?

மியான்மரில் இருந்து 103 ரொஹிங்ய அகதிகளுடன், பயணித்த படகொன்று முல்லைத்தீவுக் கடற்கரையில் கரையொதுங்கியிருந்தது. பெருமளவான ரொஹிங்ய அகதிகள், தெரிந்தோ - தெரியாமலோ இலங்கைக்குள் அடைக்கலமான இரண்டாவது சந்தர்ப்பமாக இது பதிவாகியுள்ளது. அகதிகளுக்கும் எங்களுக்கும் இடையிலான பிணைப்பு ஆழப்பொதிந்த ஒன்று. அது முல்லைத்தீவு மக்களின் உடனடித் துடிப்பிலும் பதைபதைப்பிலும் தனித்துத் தெரிந்தது. உணவுகள், உலருணவுகள், குடிபானங்கள் என்று அடைக்கலமானவர்களுக்கு அந்த மக்கள் தாராளம் காட்டினார்கள். வலியுணர்ந்தும் நிவாரணம் வழங்காவிடில் எப்படி? எனவே, முல்லைத்தீவில் மட்டுமல்ல, வடக்கு - கிழக்கில் மக்களுக்கு நெருக்கமான எந்தவொரு பகுதியிலும் அந்தப் படகு கரையொதுங்கியிருந்தால் இப்படித்தான் நடந்திருக்கும். அது ஒருபுறம் இருக்கட்டும்.

நல்லது நடக்கும்போது, ஒரு கெட்டதும் நடக்கவே செய்யும். அது ரொஹிங்யர்கள் விடயத்திலும் நிகழ்ந்திருக்கின்றது. படகொன்று கரையொதுங்கியிருக்கின்றதாம் என்ற செய்தி கிடைக்கப்பெற்றதும் அந்தப் பகுதியில் உதவிக்குக் குவிந்த ஆட்களை விடவும், ஒளிப்படங்கள் எடுக்கவும், காணொலிகள் எடுத்துக் காசுபார்க்கவும் கூடிய கூட்டம் அதிகமானது. எந்தவொரு விடயத்தையும், யூரியூப் தளத்தில் பதிவிட்டுக் காசுபார்க்கும் 'தமிழகக் கலாசாரம்' இப்போது இங்கும் விரவியுள்ளமைக்கு ரொஹிங்யர்களும் ஒரு சான்றாகியிருக்கின்றனர். மிகவும் அருவருக்கத்தக்க விடயம் இது. ரொஹிங்யர்கள் எனப்படுபவர்கள் இஸ்லாமிய சகோதர-சகோதரிகள். அத்தகையவர்கள் நீண்டதூரம் உயிரைப் பணயம் வைத்து பயணித்த இயலாமையிலும் உறங்கிக்கொண்டிருக்கும் போது அதை ஒளிப்படமாகப் பதிவுசெய்வதென்பது என்ன மனோநிலை? அவர்களின் கலாசாரம் தெரிய வேண்டாமா? எமது நடவடிக்கைகள் அவர்களுக்கு எவ்வளவுதூரம் சங்கடத்தைக் கொடுக்கும் என்பது புரிய வேண்டாமா? ஊடக அறம் சமூக வலைத்தளங்களுக்கு இல்லைத்தான் என்றாலும், தனிமனித ஒழுக்கம், மனிதாபிமானம் இவையுமா இல்லை?

மியான்மர் ரொஹிங்யர்களுக்கும், ஈழத்தமிழர்களுக்கும் இடையில் நிறைய ஒற்றுமைகள் உள்ளன. இலங்கை ஒரு பௌத்த நாடு என்ற சித்தாந்தத்தின் கீழ்தான் மிகப்பெரும் மனிதப் படுகொலைகள் இங்கு நிகழ்த்தப்பட்டன. அதேபோல், மியான்மர் ஒரு பௌத்த நாடு என்ற சித்தாந்தத்தின் கீழ்தான் அங்கு இனச்சுத்திகரிப்பு இன்றுவரை நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இங்கே உள்நாட்டுப் போரில் இனத்தைக் காக்கும் நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டார்கள். அங்கே ஆர்கன் குழுவினர் ஈடுபடுகின்றார்கள். மற்றும்படி வலியும் ஒன்றுதான், கதையும் ஒன்றுதான். அவர்களை - அவர்களின் தளத்தில் இருந்து சிந்தித்து, அவர்களின் நிலையறிந்து ஏதிலிகளை நடத்துதல்தான் எமது கடந்தகால வரலாறுக்கு நாம் கொடுக்கும் மரியாதை.



மீனவர் பிரச்சினைக்கு

## நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இரு நாடுகளும் இணக்கம்

**கொழும்பு, டிசெ.22**
**இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு விரைவில் நிலையானதொரு தீர்வைக் காண்பதற்குரிய தலையீடுகளை மேற்கொள்வதற்கு இரு நாடுகளின் தலைவர்களும் இணங்கியுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- இலங்கை, இந்திய மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தாலும், அந்தப் பிரச்சினை இன்னும் தீரவில்லை. இந்த நிலையில் மீனவர் பிரச்சினைக்கு விரைவில் நிலையானதொரு தீர்வை காண்பதற்கு உரிய தலையீடுகளை மேற்கொள்வதற்கு இரு நாட்டுத் தலைவர்களும் இணக்கத்துக்குவந்துள்ளனர் - என்றார். (ச-44)

## டிஜிற்றல் கட்டுமானம் இந்தியாவுடன் ஒப்பந்தம்

கொழும்பு, டிசெ.22
டிஜிற்றல் கட்டுமானத் துறையில் இலங்கையும் இந்தியாவும் இணைந்து செயற்படுவதற்கு முன்வைத்த புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இந்த திட்டத்தினூடாக நிதி தொழில்நுட்பங்களை வலுப்படுத்துவதுடன் அரச அதிகாரிகளின் திறன்களை வளர்த்துக்கொள்ள முடியுமெனவும் டிஜிற்றல் நிர்வாக கட்டமைப்பை உருவாக்க முடியுமெனவும் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ச-22,6)

## தேசியப் பாடசாலைகளில் அதிபர் வெற்றிடம் நிரப்பல்

கொழும்பு, டிசெ.22
தேசியப் பாடசாலைகளில் வெற்றிடம் ஏற்பட்டுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தரத்தின் அதிபர் பதவிக்கென விண்ணப்பங்களை கோருவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான விண்ணப்பங்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் கடந்த 11ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் டிசெம்பர் 31க்கு முன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



## 67,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி

கொழும்பு, டிசெ.22
நாட்டுக்கு இதுவரை 67,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.
அவற்றில் 28,500 மெற்றிக் தொன் பச்சை அரிசியும், 38,500 மெற்றிக் தொன் நாட்டு அரிசியும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.
இந்த அரிசி தொகைக்கு இலங்கை சுங்கம் இறக்குமதி வரியாக 4.3 பில்லியன் ரூபாவை அறிவித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## முட்டை விலை வீழ்ச்சி

கொழும்பு, டிசெ.22
முட்டை விலை நாட்டின் சில பகுதிகளில் வேகமாக குறைந்து வருவதாக முட்டை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.
அதன்படி, முன்னர் 40 ரூபா தொடக்கம் 45 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட முட்டை தற்போது 25 ரூபா தொடக்கம் 30 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

## காலியில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, டிசெ.22
காலி, தடெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்து கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது, மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
திங்கட்கிழமை - மார்கழி - 08
23.12.2024
சுபநேரம் : 12.25 - 01.55
ராகுகாலம் : 07.55 - 09.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகவியலாளர்களிடம் பொலிஸார் அடாவடி

மோட்டார்சைக்கிளில் பயணித்த ஊடகவியலாளர்களை இடைமறித் பொலிஸார், அவர்கள் மதுபோதையில் பயணிப்பதாகத் தெரிவித்து மோட்டார்சைக்கிளின்திறப்பைப்பூட்டி அடாவடித்தனம் புரிந்துள்ளனர். யாழ்பாணம் நகரப் பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாம் மதுபோதையில் பயணிக்கவில்லை என்றும், வேண்டுமானால் தம்மைச் சோதனை செய்யுமாறும் ஊடகவியலாளர்கள் கூறிய போதிலும் பொலிஸார் அதை ஏற்க மறுத்துள்ளனர். பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கும், மேலதிடத்துக்கும் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே பொலிஸார் தமது செயலுக்கு வருத்தம் தெரிவித்ததுடன் திறப்பையும் ஒப்படைத்துள்ளனர். (ம)

## குருதிக் கொடை

யாழ்., டிசெ. 22 அராலி தெற்கு சைவத்தமிழ் இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை அராலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-66)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 17 . 04 . 1931

இறப்பு 11 . 12 . 2024



**சி.க.ஞானசேகரம் (ஞானி மாஸ்டர்)**

அவர்கள் 11.12.2024 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் ஆலய அயலில் நீண்டகாலம் வாழ்ந்து, ஆலய பரிபாலன சபையில் 1993/1995 காலப்பகுதியில் இடைக்கால செயலாளராகவும், 2003-2005 மற்றும் 2014-2015 காலப்பகுதியில் உறுப்பினர் பதவிகளையும் வகித்து, ஆலய தொண்டுகள் பல செய்து ஆலய வளர்ச்சியில் பெரும் பங்காற்றி அமரத்துவம் அடைந்துள்ளார்.
இவர் கோண்டாவில் கணேசா சனசமூக நிலையத்தின் வளர்ச்சியில் ஆரம்ப காலம் முதல் ஈடுபட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் பொது விடயங்களில் ஆலோசனைகள் வழங்குவதில் முன்னின்று செயற்பட்ட ஒருவர்.

அவரின் ஆத்மா இறைவன் பாதங்களை அடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**பரிபாலன சபை**
**நெட்டிலைப்பாய் பிள்ளையார் ஆலயம்**
**கோண்டாவில்**

(CS 2075) A-1

## கடை வாடகைக்கு

கந்தர்மடம், அரசடி வீதி இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள கடைத் தொகுதியில் கடை ஒன்று உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: **077 905 0319**

(CS 2071) V-1

## விண்ணக வாழ்வின் 13ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 12 . 07 . 1942

விண்ணில் 22 . 12 . 2011



**Dr.மரிசலின்பிள்ளை மரியதாசன் (JP)**
(பேரின்பம்)
சுகாதார வைத்திய அதிகாரி - யாழ். மாநகர சபை(2001-2011)

என்றென்றும் உமது நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"ஆவே மரியா"
72, கோயில் வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(CS 2069) A-1

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் பாஸ்கரன் வாசுகி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 24.12.2024 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அழைப்பிதழ் கிடைக்கப்பெறாதவர்கள் இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகின்றோம்.

நீர்வேலி, அச்செழு மத்தி,
அச்செழு.

குடும்பத்தினர்
074 054 6472

(CS 2073) A-1

## நயினை அம்மன் திருமண சேவை

1985- 1992 U.K PR உள்ள மணமகன்களுக்கு (V) உள்நாட்டு மணமகள்கள் தேவை.
பதிவுக் கட்டணம் இலவசம்
தொடர்புகளுக்கு: 076 050 3863
WhatsApp : 076 311 9485

## விற்பனைக்கு
### APARTMENT

கொழும்பு 5, திம்பிரிகஸ்யாய வீதி, நாராஹென்பிட்டியவில்
தளபாட வசதிகளுடன் 2ம் மாடியில் 2 அறை 622 sq.ft, apartment விற்பனைக்குண்டு.
விலை: 16 மில்லியன். பேசித் தீர்மானிக்கலாம்
074 343 2235 / +1 647 459 6274

## ட்ரோன்களுக்குத் தடை

அமெரிக்காவின் ஒஹியோ மாகாணத்தில் உள்ள விமானப் படைத்தளத்துக்கு அருகாக உள்ள பகுதிகளில் ட்ரோன்களைப் பறக்கவிடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம)

## 2 வீடுகள் வாடகைக்கு உண்டு

கச்சேரிக்கு அண்மையில் 4அறைகளுடன் மாத வாடகை 30,000/-, திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலையில் இருந்து 300M தூரத்தில் 4 அறைகளுடன் மாத வாடகை 70,000/- வாடகைக்கு உண்டு

தொடர்புகளுக்கு: (CS 780) V-1
**077 306 8993**

## 5 ஆம் ஆண்டு நினைவில்....

### அமரர் திருமதி தேவராசா ஆனந்தி

மண்ணில் 07.09.1969

விண்ணில் 18.12.2019

திதி: தேய்பிறை சப்தமி



வானும் கனல் சொரிந்த நாளொன்றில்
காலனவன் உங்களைக் கவர்ந்து சென்று
ஐந்தாண்டுகள் ஓடிமறைந்தும்கூட
தேனாகச் சுரந்திடும் உங்கள்
அன்பும் ஆனந்தமும் இழந்தும்
அனுதினமும் தவிக்கின்றோமே!

தொல்புரம் மேற்கு
சுழிபுரம்

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி கந்தையா நல்லம்மா

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், அல்லாரை வீதி, மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா நல்லம்மா அவர்கள் நேற்று (21.12.2024) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - செல்லமுத்து தம்பதியரின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையா அவர்களின் அருமை மனைவியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, தனபாலசிங்கம், இராசையா, சிவக்கொழுந்து, சோமசுந்தரம் மற்றும் சரஸ்வதி, விஜயரட்ணம் (கனடா) ஆகியோரின் சகோதரியும் செல்வராணி, கணேசநாதன் (முன்னாள் ஆசிரியர் யாழ் இந்து மகளிர் கல்லூரி), இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற முன்னாள் வைத்திய அதிகாரி - யாழ் போதனா வைத்தியசாலை), செல்வரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி), புஸ்பராணி, செல்வநாதன் (பொறியியலாளர் - முன்னாள் திட்டப்பணிப்பாளர் - வீதி அபிவிருத்தி அதிகாரசபை), தங்கராணி (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தாயாரும், அமரர் தர்மலிங்கம், காந்திமதி, சாந்தினி, விபுலராணி, பாலகுமாரி, கிருஷ்ணகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், குமுதினி (கனடா), குவேதினி (அமெரிக்கா), அமுதினி, அபிநவன், ஆதிகா, அஞ்சனா, டார்வின், சிவரம்யா, கிருஸ்னியா, அபிமன்யு ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பிருத்திகா, ஜினோதன், ஜெசித்தா, ஜெனுத்தா, ஆதூரி ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| திரு.க. கணேசநாதன் | - +49 1575 4365 628 |
| திரு. க. இரத்தினசிங்கம் | - 077 539 1367, |
| திரு.க. செல்வரத்தினம் | - 077 729 8031 |
| திரு.க. செல்வநாதன் | - 071 444 5878 |
| திருமதி [illegible]ராணி | - 077 881 4802 |
| திருமதி [illegible]ங்கராணி | - +49 151 255 06026 |

தகவல் :
குடும்பத்தினர்


(CR/43949) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கந்தையா சிவநேசன்

(ஓய்வுபெற்ற கனிஷ்ட பிரிவு அதிபர் - மானிப்பாய் மெமோரியல் கல்லூரி)



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவநேசன் நேற்று (21.12.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

பிறப்பு : 28.11.1944
இறப்பு : 21.12.2024

குடும்பத்தினர்
மனைவி
077 935 2417
மகன்
077 674 4125

# சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வேண்டும்

யாழ்ப்பாணம், டிச.22

நீண்டகாலமாக வடமாகாணத்தில் கடமையாற்றி ணங்களுக்காக மீளப்பெறப்பட்ட நிரந்தர நியமனத்தை மீண்டும் வழங்குவதற்கு புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வடமாகாண ஜனசவிய சுகாதார சேவைகள் சங்க செயலாளர் முகுந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடமாராட்சியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடக்கு மாகாணத்தில் 389 சுகாதாரத் தொண்டர்களுக்கு கடந்த 2018 ஆம் ஆண்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு அரசியல் காரணங்களுக்காக மறுநாளே முன்னைய அரசாங்கத்தால் இரத்து செய்யப்பட்டுள்ளது.

நிரந்தர நியமனம் கோரி நீதிமன்றம்வரை சென்றுள்ள போதும் இதுவரை 389 பேருக்குமான நியமனாங்கள் மீள வழங்கப்படவில்லை.

வடமாகாணத்தில் அதிகளவான சிற்றூழியர்கள் பற்றாக்குறை நிலவி வருகிறது. புதிய பிரிவுகளை நிறுவியுள்ளதால் அதற்கான ஆளணித் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இவற்றை புதிய ஜனாதிபதி கருத்தில் கொண்டு சுகாதாரத் தொண்டர்களுக்கு வழங்கப்பட்டு இடைநிறுத்தப்பட்ட நியமனங்களை மீண்டும் வழங்க வேண்டும்- என்றார். (ச-27)


## விசா சேவைகள்

பல்கேரியா, கங்கேரி, ருமேனியா, செலவாக்கியா ஆகிய நாடுகளுக்கு வேலை விசாவில் செல்வதற்கான சந்தர்ப்பம் மற்றும் கடனா, பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா விசிட் விசா. UK Work Permit சகல விசா ஆவணங்களும் எம்மால் செய்து தரப்படும்.

M.K.Visa World (PVT) Ltd
Vavuniya Colombo
T.P:074 035 2940
(CS 29072) A-1


# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## தம்பிஐயா கதிரவேற்பிள்ளை



மண்ணில் 23 . 05 . 1938
விண்ணில் 02 . 01 . 2024

ஆண்டு ஒன்று ஆனபோதிலும் ஆறவில்லை எம்துயரம்
நீண்டு நெடு வாழ்வு நாம் வாழ வழி வகுத்த தெய்வமே
தீண்டும் உங்கள் நினைவுகளால் எமது உள்ளங்கள்
நிறைகின்றன தங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.
(cs.43942) (N -1)

குடும்பத்தினர்
077 9009 420

# 35ஆம் ஆண்டு நினைவு நாள்

அமரர் நடராஜா
## சந்திரராஜா (போஸ்)

(முன்னாள் - உரிமையாளர் குகன் ஸ்ரோஸ் தலவாக்கலை)



மண்ணில் 20.02.1948
விண்ணில் 19.12.1989

திதி: சப்தமி (22.12.2024)

நீங்கள் எம்மை விட்டு பிரிந்து 35 ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவுகள் எம் உள்ளத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும் என்றென்றும் தங்கள் ஆசி வேண்டி எமக்கு வழிகாட்டியாக இருந்து தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


பலாலி றோட்,
கோண்டாவில்.
(cs.29485) (N -1)

என்றும் தங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் அமிர்தலிங்கம்

(இளைப்பாறிய சாலைப்பரிசோதகர், கோண்டாவில் சாலை, இலங்கைப் போக்குவரத்து சபை)



மட்டுவில் வடக்கு சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கைதடி தென்கிழக்கு கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் அமிர்தலிங்கம் நேற்று முன்தினம் (20.12.2024) வெள்ளிக்கிழமை மாலை 06.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-நேசரத்தினம் தம்பதியினரின் பாசமிகு மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கமணி (குஞ்சு) அவர்களின் ஆருயிர்க் கணவரும், பிரியதர்சினி, தபீசன் (சுவிஸ்), அகீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கபிலேந்திரன் (ராஜா-அனுஷ் அன்ட் நரேன் டீசல் என்சினியர்ஸ் மற்றும் PD Automart யாழ்ப்பாணம்), கஜானா (சுவிஸ்) ஆகியோரின் நேசமிகு மாமனாரும், அனுஷன், டிரோஜன், பிரீத்தி ஆகியோரின் ஆருயிர் பேரனும் காலஞ்சென்ற அரியநாயகம் மற்றும் அரியமலர், புவனேந்திரன் (சின்ராஜன்-கனடா), புவனேஸ்வரி-மனோகரன் (கனடா), பாலகிருஸ்ணன் (கனடா), பிரபாகரன், பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்கராசா, தங்கமலர், புஸ்பராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு 03.02.1952
இறப்பு 20.12.2024

"தாஜ்மகால்"
கைதடி தென்கிழக்கு, கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப 1976 இல் பிறந்த விஞ்ஞானப் பட்டதாரி அரச உத்தியோக திருமணமாகாத மணமகனுக்குத் திருமணமாகாத நற்குணமுள்ள தகுந்த மணமகள் தேவை.

(CS/56980) J-1

தொடர்பு:- 074 242 9737

## மணமகள் தேவை

யாழ். இந்து (P) புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த 1987 ஆம் ஆண்டு உத்திரட்டாதி நட்சத்திரம் மீன இராசியில் பிறந்த சொந்தமாக வெல்டிங் வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. பெற்றோர் தொடர்புகொண்டால். சீதனம் எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை.

(CS/56981) J-1

077 579 5422, 077 337 9686



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

(CS/56852) J-1

தொடர்புகளுக்கு :- 077 281 1234

## TRAVEL AGENT CALL CENTER JOBS, EMPLOYMENT WITH AMADEUS EXPERIENCE

தமிழ், ஆங்கில மொழியில் புலமையுடைய Amadeus airline reservation system ஐக் கையாளும் திறமையுடையவர்களுக்கான வேலை வாய்ப்பு.
ஐரோப்பாவில் 25 வருடங்களுக்கு மேலாக IATA அங்கத்துவம் பெற்ற AIRLINE TICKET பயண முகவர் நிறுவனம் ஒன்றிற்கு இலங்கையில் இருந்து வேலை Amadeus' airline reservation system (Call Center) விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

தேவையான தகுதிகள் :

1). Amadeus' airline reservation system experience
2).பயணமுகவராக பணியாற்றிய முன் அனுபவம்
3).சரளமான தமிழ் ஆங்கில அறிவு
4). கணினிகளைக் கையாளும் திறன்

Basic Salary 2 Lakhs + Commission

தகைமை உடையவர்கள் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் CV க்களை அனுப்பிவைக்கவும்
Dirmalan 73@ gmail.com

(CR/43944) J-1

0777661216

## சிங்களம்

இம் முறை G.C.E (O/L) இரண்டாம் மொழி சிங்களப் பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான (Past Paper) Classes (எவரும் பங்குபற்றலாம்)

தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி 2025 இல் தரம் 06 இற்கு செல்லவுள்ளவர்களுக்கான சிங்களம்.

தரம் - 06, 07, 08, 09, 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கான சிங்களம் (பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமைவாக)

A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கான சிங்களம் பேச, எழுத, வாசிக்க மிக இலகுவான முறையில்.

**ஆரம்பம் 04.01.2025 சனிக்கிழமை**

விரிவுரையாளர் - **ஸ்ரீ மாஸ்டர்**

**ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்**

இல.164, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

இல.41, நக்காலேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
077 703 3729

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயு, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புரூட், ரகன் புரூட், செவிளை தென்னை, விலும்பி, நெல்லி, முருங்கை, பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புரூட், ரம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்தான், ஏலக்காய், சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா, கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, உரும்பிராய் மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில் 077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

K.K.S வீதி, மல்லாகத்தில் அமைந்துள்ள ஒழுங்கையில் இரண்டாவது வீடு, 3 அறைகள், குளியலறை, சமையலறை இதர வசதிகளுடன் கூடிய 2.5 பரப்பில் அமைந்துள்ள வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

(CR/43852) J-1

076 744 8099

## மணமகன் தேவை

யாழ். R.C கனடாவைச் சேர்ந்த 1999 ம் ஆண்டு பூர நட்சத்திரம் சிம்மராசியில் பிறந்த விவாகரத்தான மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.
(கனடாவில் வசிக்கின்ற PR உள்ள அல்லது PR அற்ற மணமகன் விரும்பத்தக்கது.)

(CS/56994) J-1

077 609 0406

## மணமகள் தேவை

1997, இந்து, ஸ்வாதி, DOCTOR
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - திருகோணமலை
மணமகன் பதிவு இல: 11059.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401

(CS/29454A) J-1

www.EQMarriageService.com

## வாடகைக்கு வீடு தேவை

உடையார்கட்டு, வள்ளிபுனம், தேவிபுரம் ஆகிய இடங்களில் வாடகைக்கு வீடு தேவை. ஆறு மாதத்திற்கு மட்டும்

(CR/43931) (N-1)

076 1423073

## மணமகள் தேவை

1992, இந்து, கார்த்திகை, CIVIL ENGINEER
பூர்வீகம் - மீசாலை, வதியுமிடம் - SINGAPORE
மணமகன் பதிவு இல: 10970.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401

(CS/29484A) J-1

www.EQMarriageService.com

## மணமகள் தேவை

யாழ். இந்து 1986 இல் பிறந்த கொழும்பில் கட்டடத் துறையில் TO ஆக பணிபுரியும் மண மகனுக்கு 35 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை.
(ஆசிரியை விரும்பத்தக்கது)
harinie.sris@gmail.com

(CR/43947) J-1

(Whats app) +61 420 64 3636
077 413 6713

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com

(CS/56684) J-1

## மணமகள் தேவை

யாழ். இந்து 1980 இல் பிறந்த UK வில் PR உடைய மணமகனுக்கு 40 வயதிற் குட்பட்ட மணமகள் தேவை.
harinie.sris@gmail.com

(CR/43946) J-1

(Whats app) +61 420 64 3636

## UK Immigration Consultancy



### STUDENT VISA

Undergraduate and Post - Graduate Degrees
No IELTS needed if you have O/L Credit pass for English
(IELTS தேவையில்லை க.பொ.த. (சா.தரப்) பரீட்சையில் ஆங்கிலத்தில் C சித்தியடைந்தால் போதுமானது

Places Available for January Intake

### Skilled Worker Visa

Only the visa applications
(Visa விண்ணப்பம் மட்டும் செய்து தரப்படும்)

### UK Visa Refusals

All types of UK visa refusals
(Visit visa, Student visa, Skilled worker visa, Spouse visa)
We will introduce you to experienced lawyers based in UK to handle your:

- Admin Review
- Tribunal Appeal
- Judicial Review

(அனைத்து வகையான Visa நிராகரிப்புகளுக்குமான AdminReview, Tribunal Appeal, Judicial Review செய்து தரப்படும்)

YOU CAN MEET THE UK LAWYERS ON 27TH AND 28TH DECEMBER IN JAFFNA

PLEASE CONTACT
077 019 1110

## அறக்கட்டளை ஒன்றின் செயற்பாட்டிற்கு முகாமையாளர், உதவிமுகாமையாளர் தேவை

➤ முகாமையாளர் ➤ உதவி முகாமையாளர்

வவுனியா புறநகர் பகுதியை மையமாகக் கொண்டு இந்து சமய விழுமியங்களை மையக்கருவாகக் கொண்டு செயற்படும் சமூக அமைப்பானது குறித்த பதவிக்கு தகுதியானவரை எதிர்பார்க்கின்றது.

- இந்துசமய விழுமியங்களை பேணுபவர்
- மக்கள் சேவையை புரிந்து கையாளக்கூடியவர்
- எதிர்கால சந்ததியுடன் இணைந்து செயற்படக்கூடியவர்.
- அலுவலக கோப்புகள், பயனாளிகள் விபரம், அறநெறி பாடசாலை விடயங்கள், நாளாந்த வரவு செலவு விபரங்கள் பேணுதல்.
- இணைந்து செயற்படக் கூடியவராக இருப்பதுடன் வேலை நேரங்களை சீராக கடைப்பிடிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். வயது வேறுபாடுகளின் தேவைகளை புரிந்து செயற்படக் கூடியவர் போன்ற பண்புகளையும், தகுதிகளையும் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(CR/43948) J-1

077 677 2459

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் : 16.03.1927 விண்ணில் : 22.12.1974

## அமரர் கனகாம்பிகை சபாரத்தினம்

பெற்றவருக்கு கனகாம்பர மலராக,
துணைவருக்கு 'திலகம்' எனும் வரமாக,
எங்களுக்கு அன்னையே நீங்கள் எல்லாமாக!
அன்பு, அக்கறை, அரவணைப்பு,
எல்லாம் தந்தவர் நீங்கள் தானே !
எமைப் பிரிந்து ஆண்டுகள் ஐம்பது ஆனாலும்!
உறுதியின் வடிவமாய் என்றும் நீங்கள்!
எம் உயிருள்ளவரை உள்ளத்தில்
என்றும் பத்திரமாய்......!


"திலக வாசம்"
தபாலக வீதி,
சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
இல.5, கல்லடி வீதி,
சாவகச்சேரி.

(cr.43929 (N-1)

# மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 12 . 1963



இறப்பு 20 . 12 . 2024

## சிவராசா மனோரஞ்சிதன் (பவுண்)

தவசிகுளம். கொடிகாமத்தினைப் பிறப்பிடமாகவும். பழம் வீதி. கந்தர்மடம். யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா மனோரஞ்சிதன் (பவுண்) அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2024) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவராசா - ருக்குமணி தம்பதியரின் மூத்த மகனும். காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி இராசு (JP) - இராசமணி ஆகியோரின் அன்பு மருமகனும். ஞானகுமாரி (கலா) அவர்களின் பாசமிகு கணவரும். கீர்த்திகா (வங்கி உத்தியோகத்தர் - யூனியன் வங்கி) அவர்களின் பாசமிகு தந்தையும். சிறிரஞ்சன். ஜெயரஞ்சன். யோகரஞ்சன் (அவுஸ்திரேலியா). யோகரஞ்சினி (உமா - டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும். தர்மகுலசிங்கம் (JP). தனபாலசிங்கம் (விநாயகர் பல்பொருள் அங்காடி) காலஞ்சென்ற குணசிங்கம் (முன்னாள் மாநகரசபை ஊழியர்). துரைராஜசிங்கம் (மோகன்). விஜயகுமாரி மற்றும் இராஜகுமாரி. செல்வகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும். இராஜேந்திரம். சாந்தலிங்கம். ஜெயசந்திரா. வசந்தகுமாரி. தனலக்சுமி. செல்வராசா. அனாற்மேரி மெற்றில்டா. அம்பிகா வதனி. ரதனி ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல 28. பழம் வீதி. கந்தர்மடம். யாழ்ப்பாணம் முகவரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 28, பழம் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/56982) J-1

## நத்தார் விழா

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் கிறிஸ்தவக் கழகம் நடத்தும் வருடாந்த நத்தார் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் கலட்டியில் அமைந்துள்ள றூட் பொதுமண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பிரதம விருந்தினராகவும், நாடாளுமன்ற உறுப்பினர் கருணாநாதன் இளங்குமரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-66)

# மரண அறிவித்தல்



தோற்றம் 21.08.1987

மறைவு 18.12.2024

## லினோ கிறிஸ்ரீன் ஸ்ரீறங்கராஜ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட லினோ கிறிஸ்ரீன் ஸ்ரீறங்கராஜ் அவர்கள் கடந்த 18.12.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்தோப்பர் - அரியமலர் (கிளி) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் - கௌரியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஸ்ரீறங்கராஜ் அவர்களின் அன்பு மனைவியும், றஜீஷன், வேணுஷிகா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (23.12.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: ஸ்ரீறங்கராஜ் (கணவர்)**
**077 354 3579**

(CS/56988) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியான்மர் அகதிகள் விரைவில் நடவடிக்கை

அரசு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.22
மியான்மர் படகில் கரையொதுங்கியோருக்கு அவசியமான உணவு, மருந்துப் பொருள்கள் மற்றும் அவசியமான ஏனைய வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இவ்விவகாரம் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி, அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் வெகுவிரைவில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளார்.

இது உள்நாட்டு விவகாரம் அல்ல, மாறாக பிறிதொரு நாட்டுடன் தொடர்புடைய சர்வதேச விவகாரம். எனவே எமது நாட்டினால் கைச்சாத்திடப்பட்டிருக்கும் சர்வதேசபிரகடனங்களுக்கு அமைவாகவே இதனை அணுகமுடியும்.

மேலும் இவ்விடயம் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி, இயலுமான வரை விரைவில் இதுகுறித்த நிரந்தர தீர்மான மொன்றை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)



# சிறுவர் சட்டங்கள் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், டிசெ. 22
சிறுவர் சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு பயிற்சி பட்டறை சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

சங்கானை பிரதேச செயலகம் , வேல்ட் விஷன் நிறுவனம் மற்றும் சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையம் என்பன இணைந்து முன்னெடுத்த பயிற்சிப் பட்டறையில் சங்கானை சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ரவிராஜ், கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தின் புலம்பெயர் தேச நிதிப் பங்காளர் திருமதி தர்மினி, கலைமகள் இலவசக் கல்வி நிலைய உபதலைவர் சிவானந்தன், செயலாளர் சுபகரன், கணக்காய்வாளர் பஞ்சலிங்கம், சட்டத்தரணிகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-25, 125)

# ஆழியவளையில் தொடரும் மணலகழ்வு

## கட்டுப்படுத்த நடவடிக்கையில்லை பிரதேச மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், டிசெ. 22
**வடமராட்சி கிழக்கு, ஆழியவளைப் பகுதியில் இரவோடு இரவாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தப்பட்டபோதும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நள்ளிரவு நேரங்களில் ஜேசிபி மூலம் டிப்பர்களில் ஏற்றி மணல் கொள்ளை இடம்பெறுகின்றது. எமது பிரதேச மணல் வளத்தை அழித்து சூறையாடிச் செல்வதால் தற்பொழுது அந்தப் பாதைகளினூடாக பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் மணல் மேடுகளை அழிப்பதால் கடல் நீர் குடிமனை களுக்குள் புகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. கிராம அலுவலர் ஊடாக மருதங்கேணி பிரதேச செயலர் மற்றும் மருதங்கேணி பொலிஸாருக்கு அறிவித்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

எனவே உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து மணல் கொள்ளையை தடுத்து நிறுத்தி தமது கிராமத்தை பாதுகாக்கவேண்டும்- என்றனர். (ச-100)


# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 09 . 1938



மறைவு
21 . 12 . 2024

## காசிப்பிள்ளை நடராசா

(சிறுப்பிட்டி விஸ்ணு துர்க்கா ஆலய தர்மகர்த்தா)

சிறுப்பிட்டி வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை நடராசா நேற்று (21.12.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், குகனேஸ்வரியின் அன்புக் கணவரும், சற்குணானந்தன் (ஆனந்தன்), ஜெயந்தினி (ஆசிரியை - சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை), மாலினி (ஜேர்மன்), வரதராசன் (அவுஸ்திரேலியா), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரஸ்வதி (மருந்தாளர் - மந்திகை வைத்தியசாலை), சத்தியேந்திரா, இராகவன் (ஜேர்மன்), விஜிதா (அவுஸ்திரேலியா), டிலானி (கனடா) ஆகியோரின் மாமனாரும், பிரஜித், கஜீபனா, சினேகா, யுவேதா, யதுசன், மிதுசன், திரிஷிகா, அபி, சஞ்ஜய், லவன்சியா, நிஷ்மியா, தியன்சியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.


தகவல்: குடும்பத்தினர்
077 7917 836 (மகன்)
076 0065 934 (மகன்)

(CR 43954) A-1




# ஒளிவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 22
யாழ். மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தின் ஏற்பாட்டில், ஒளிவிழா நிகழ்வு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நலன்புரி கழகத் தலைவரும் உதவி மாவட்ட செயலாளருமான உ.தர்சினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட செயலர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக சுண்டுக்குளி சென்ஜோன்ஸ் ஆலய முகாமைக்குரு யு.ஸ்ரிபன் ஜெபச்செல்வன் அடிகளார், பங்குத் தந்தை அருட்பணி எஸ். அஜந்தன் அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 9,66)



வடமாகாண அபிவிருத்தி அலுவலர் சங்கத்தின் நிர்வாகசபைத் தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தலைவராக மீண்டும் வி. விஜயரூபன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சங்கத்தின் செயலாளராக எ. ஜெபர்சன், பொருளாளராக அ. சுகந்தன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுடன் 21 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ச-25, 9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

BALLY'S CASINO

வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கான அறிவித்தல்

இல.34, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை , கொழும்பு - 10 எனும் முகவரியில் அமையப் பெற்றுள்ள பெலீஸ் லிமிட்டட் (Ballys Limited) நிறுவனம் பந்தையம், சூதாட்ட விளையாட்டுக்காக (கெசினோ) அமைக்கப்பெற்ற நிறுவனமாகும்.

பெலீஸ் லிமிட்டட் நிறுவனத்தில் பந்தையம், சூதாட்ட விளையாட்டு மட்டுமே இடம்பெறுவதோடு வேறு எந்தவித வர்த்தக நடவடிக்கைகளும் பணக்கொடுக்கல் வாங்கல்களும் நடைபெறுவதில்லை என்பதை இத்தால் தெரிவிக்கின்றோம்.

போலியான நபர்கள் பெலீஸ் லிமிட்டட் நிறுவனத்தின் பெயர் மற்றும் கணக்கு இலக்கத்தை பாவித்து செயற்படுத்தும் எந்தவொரு வர்த்தகம் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கு பெலீல் லிமிட்டட் நிறுவனம் பொறுப்பேற்கமாட்டாது என்பதோடு இவ்வாறான மோசடிக்காரர்களிடம் அகப்பட வேண்டாமென மேலும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமைத்துவம்
பெலீஸ் லிமிட்டட்

Casino Business (Regulation) Act, No 17 of 2010

BELLAGIO CASINO

வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கான அறிவித்தல்

இல.430, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை, கொழும்பு - 03 எனும் முகவரியில் அமையப் பெற்றுள்ள பெல்லாஜியோ லிமிட்டட் (Bellagio Limited) நிறுவனம் பந்தையம், சூதாட்ட விளையாட்டுக்காக (கெசினோ) அமைக்கப்பெற்ற நிறுவனமாகும்.

பெல்லாஜியோ லிமிட்டட் நிறுவனத்தில் பந்தையம், சூதாட்ட விளையாட்டு மட்டுமே இடம்பெறுவதோடு வேறு எந்தவித வர்த்தக நடவடிக்கைகளும் பணக்கொடுக்கல் வாங்கல்களும் நடைபெறுவதில்லை என்பதை இத்தால் தெரிவிக்கின்றோம்.

போலியான நபர்கள் பெல்லாஜியோ லிமிட்டட் நிறுவனத்தின் பெயர் மற்றும் கணக்கு இலக்கத்தை பாவித்து செயற்படுத்தும் எந்தவொரு வர்த்தகம் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கு பெல்லாஜியோ லிமிட்டட் நிறுவனம் பொறுப்பேற்கமாட்டாது என்பதோடு இவ்வாறான மோசடிக்காரர்களிடம் அகப்பட வேண்டாமென மேலும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முகாமைத்துவம்
பெல்லாஜியோ லிமிட்டட்

Casino Business (Regulation) Act, No 17 of 2010

# அநீதிக்கு இனி முற்றுப்புள்ளி

### கத்தோலிக்க திருச்சபை நம்பிக்கை

கொழும்பு, டிசெ.22
இலங்கையில் நியாயமான தேர்தலின் பின் ஊழல் மற்றும் அநீதி இல்லாத ஆரோக்கியமான அரசியல் கலாசாரம் உருவாகும் என தாங்கள் நம்புவதாக இலங்கை கத்தோலிக்க திருச்சபை நத்தார் வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளது.
பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கு ஒவ்வொருவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். நாட்டில் ஊழலற்ற நேர்மையான அரசியல் கலாசாரம் உருவாகும் என தாங்கள் நம்புவதாக அந்த வாழ்த்துச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 6)



## சிறைக்கைதி தப்பியோட்டம்

கொழும்பு, டிசெ.22
அம்பாறை, சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்துக்கு அழைத்து வந்த சந்தேகநபர் ஒருவர் நேற்றுத் தப்பி ஓடியுள்ளார்.
தப்பிச் சென்ற சந்தேகநபரை பொலிஸார் உட்பட சிறைச்சாலை அதிகாரிகள் தேடி வருகின்றனர்.
கடந்த 7 ஆம் திகதி குறித்த சந்தேகநபர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ஹிமாலி குற்றமற்றவர்

### அரசு கூறுகிறது

கொழும்பு, டிசெ.22
தற்போது ஐ.நா.வுக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதியாகக் கடமையாற்றி வரும் ஹிமாலி அருணதிலக, அவுஸ்திரேலியாவுக்கான பிரதித் தூதுவராகக் கடமையாற்றிய காலத்தில் வீட்டுப்பணிப்பெண்ணாக பணி புரிந்த பெண்ணுக்கு சம்பளம் வழங்கவில்லை என வெளிவந்த செய்தி முற்றிலும் தவறானது என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.
வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் அவர்களது பிரத்தியேக ஊழியர்களுக்குமான சம்பளங்களை இலங்கை அரசாங்கமே வழங்குகிறது.
குறித்த பணிப்பெண்ணுக்கு இலங்கை சம்பள நிர்ணய சபையால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. எனவே அவுஸ்திரேலியாவுக்கான முன்னாள் பிரதி தூதுவர் ஹிமாலி அருணதிலக மீது குற்றம் இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
இதேவேளை ஹிமாலி அருணதிலக அவுஸ்திரேலியாவுக்கான பிரதி தூதுவராக கடமையாற்றிய காலத்தில் வீட்டுப்பணிப்பெண்ணாக பணிபுரிந்த பெண்ணுக்கு சம்பளம் வழங்கவில்லை என அவரது பணிப்பெண் அவுஸ்திரேலிய நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் ஹிமாலி அருணதிலகவுக்கு ஒரு இலட்சம் அவுஸ்திரேலிய டொலர் தண்டம் விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச- 25, 6)

## ஒரு கோடி ரூபா பெறுமதியான போதையுடன் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ.22
ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய ஹெரோய்ன் மற்றும் ஐஸ் ரக போதைப்பொருளுடன் கல்கிஸ்ஸை பகுதியில் வைத்து ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த நபர் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருபவர் என விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவரிடமிருந்து ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பணமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

## குடு சலிந்து பிணையில்

கொழும்பு, டிசெ.22
பாதாள உலக கும்பலின் தலைவரான 'குடு சலிந்து' என்று அழைக்கப்படும் சலிந்து மல்ஷிக குணரத்ன என்பவரை 10 இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளில் விடுதலை செய்து பாணந்துறை மேலதிக நீதிவான் சமன் குமார உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

## போதையுடன் ஒருவர் மதவாச்சியில் கைது

வவுனியா, டிசெ.22
போதை மாத்திரைகளை தன்வசம் வைத்திருந்த 19 வயதுடைய இளைஞன் ஒருவரை விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர்.
மதவாச்சி பொலிஸ் பிரிவின் இசின்பெஸ்ஸகல பகுதியில் பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பின் போதே இளைஞன் கைது செய்யப்பட்டார்.
கைது செய்யப்பட்ட இளைஞனிடம் இருபதுக்கும் அதிகமான போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. விசேட அதிரடிப்படையின் செட்டிகுளம் முகாம் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (ச-இ)

## மேல் மாகாணத்தில் ஆசிரியர்களுக்கு கட்டுப்பாடு

கொழும்பு, டிசெ.22
மேல்மாகாணத்தில் உள்ள ஆசிரியர்கள் தனியார் மேலதிக வகுப்புகளை நடத்துவதைக் கட்டுப்படுத்தி மாகாணக் கல்வி அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
மேல் மாகாண கல்விச் செயலாளர் நிசாந்தி ஜெயசிங்கவினால் நேற்று இந்த சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளார்.
மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலை நேரங்களில் மாணவர்களிடம் மேலதிக வகுப்புக்கான கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு தனியார் வகுப்புகளில் கற்பிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறி வீழ்ந்த முதியவர் பலி

யாழ்ப்பாணம், டிசெ. 22
அண்மையில் இடம் பெற்றவீதிவிபத்தொன்றில் காயமடைந்த முதியவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். சுழிபுரத்தைச் சேர்ந்த ஓய்வுநிலை அதிபரான கந்தையா சிவனேசன் (வயது -80) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
மோட்டார்சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது, சங்கானையில் உள்ள வெள்ள வாய்க்காலுக்குள் தவறி வீழ்ந்த முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார்.
(ம-100)

## ரணில்...

யாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த வாரம் இந்தியாவுக்குச் சென்று திரும்பியிருந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் இந்தியாவுக்குச் செல்கின்றமை பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.
இன்றுமுதல் அடுத்த ஒரு வாரத்துக்கு இந்தியாவில் தங்கியிருக்கவுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில், பல்வேறுபட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## எந்தவொரு...

வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் உள்ளேன் என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.
கண்டி அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர்களை சந்தித்துக் கலந்துரையாடியதன் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மாகாணசபை தேர்தல் விடயத்தில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. அனைத்துக்கும் அப்பால், மாகாண சபைத் தேர்தலை நடத்தி மாகாண அரசியல் தலைமைத்துவத்தை உரிய தரப்பினருக்கு வழங்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம்.
மாகாணசபைத்தேர்தல் விவகாரத்தில் இந்தியா அழுத்தம் எதையும் பிரயோகிக்கவில்லை. எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதிர்வரும் ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக குறிப்பிட்டிருந்தோம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமையவே நாங்கள் செயற்படுவோம். மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும். இந்தியா, சீனா என அனைத்து நாடுகளுடன் இணக்கமாகவே செயற்படுவோம். ஏனெனில், புறக்கணிக்கப்பட்ட அரசியல் மற்றும் வெளிவிவகாரக் கொள்கைகளை நாங்கள் கடைப்பிடிக்கவில்லை - என்றார். (அ-ம-இ)

## இலங்கைக்கு...

என்று நாணயநிதியத்தின் தொடர்பாடல் திணைக்களப் பணிப்பாளர் ஜூலி கோசெக் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
நாணயநிதியத்தின் மூன்றாம் கட்ட நிதி விடுவிப்புக்காக இலங்கை அரசாங்கத்தால் செய்யப்படவேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் அனுமதி ஒன்றே கடைசித் தடைதாண்டலாக உள்ள நிலையிலேயே, இலங்கைக்கு மூன்றாம்கட்ட நிதி கிடைக்கும் என்று ஜூலி கோசெக் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-ம-இ)

## ஜனாதிபதியைக்...

ஜனாதிபதி அநுரவை, ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல்நாள் கொலை செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று முன்னாள் பொலிஸ் அதிகாரியொருவர் வழங்கிய தகவல்களுக்கு அமையவே இந்த விசாரணைகள் இடம்பெறுகின்றன. குற்றச்சாட்டை முன்வைத்த பொலிஸ் அதிகாரியிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் அறிக்கையிட்டுள்ளனர்.
அநுரகுமார திஸாநாயக்கவைக் கொல்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், அவரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் தேசிய மக்கள் சக்தியினர் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## டிசெம்பரில்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணத்தில் அண்மையில் நிலவியசீரற்றகாலநிலையைத்தொடர்ந்து, டெங்குத் தொற்று மிகையாக அதிகரித்து வருகின்றது. இதன்படி, நவம்பர் மாதத்தில் 134 பேரும், டிசெம்பர் மாதத்தில் 91 பேரும் டெங்குத் தொற்றுக்கு ஆட்பட்டுள்ளனர். எனவே, பொதுமக்கள் தங்களின் சுற்றுப்புறச் சூழலை தூய்மையாகப் பேணுவது அவசியம் -என்றார். (அ-ம-125)

## பொன்னாலை...

போராட்டம் இடம்பெறவுள்ளது.
பொன்னாலை - பருத்தித்துறை இடையேயான வீதியின் தொண்டைமானாறு பாலம் முதல் பருத்தித்துறை துறைமுகம் வரையான பகுதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இந்த வீதி உடன் புனரமைப்புச் செய்யப்படவேண்டும் என்று வலியுறுத்தியே வல்வெட்டித்துறைச் சந்தியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை உணவுத் தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
பருத்தித்துறை - யாழ்ப்பாணம் இடையேயான 751 மற்றும் பருத்தித்துறை - கீரிமலை இடையேயான 763 வழித்தடங்களில் இயக்கப்படும் பேருந்துச் சேவை குறித்த வீதியூடாகவே இடம்பெற்று வருகின்ற நிலையில் நாளாந்தம் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பெருமளவான மக்கள் பெரும் துன்பத்தின் மத்தியிலேயே போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.
(அ-ம-26-100)

## தவறான...

என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
(அ-ம-66)

## மக்களின்...

டத்தில் ஈடுபடவுள்ள நிலையில், அரச தரப்பில் போராட்டத்தைத் தடுத்து நிறுத்த தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
போராட்டத்தை ஒழுங்கமைத்துள்ளவர்களை அரச தரப்பின் பிரதானிகள் தொடர்புகொண்டு, தாம் ஆட்சிப் பொறுப்பேற்று மிகக் குறுகிய காலமே ஆகின்ற நிலையில், அதற்குள் போராட்டங்களை நடத்துவது நல்லதல்ல என்றும், போராட்டத்தைக் கைவிட்டு தம்மைச் சந்தித்துப் பேச்சு நடத்துமாறும் கோரியுள்ளனர்.
எனினும், குறித்த கோரிக்கைகளை முற்றாக நிராகரித்த போராட்டக்குழுவினர், இது அரசுக்கு எதிரான போராட்டமல்ல எனவும் நீண்டகாலமாக கண்டுகொள்ளப்படாதுள்ள அடிப்படைப் பிரச்சினை தொடர்பில் நடத்தப்படும் போராட்டம் என்றும் அரச தரப்புப் பிரதானிகளிடம் கூறியுள்ளனர்.
அத்துடன், போராட்டத்தின்போது சம்பவ இடத்துக்கு வருகைதந்து மக்களுக்கு வாக்குறுதியை வழங்குமாறும் போராட்டக் குழுவினர் அறிவித்துள்ளதாக அறியமுடிகின்றது.
அத்துடன், போராட்டத்தில் கடற்றொழிலாளர் சங்கத்தினர் பலர் கலந்துகொள்ளவுள்ள நிலையில், இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாம் என்று அவர்களுக்கும் அழுத்தம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
(அ-ம-100)

## மூன்று...

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடரைத் தொடர்ந்தே அங்கு அதிகளவான பாம்புகள் அவதானிக்கப்படுகின்றன என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.
மடு பிரதேச செயலகத்தின் பண்டிவிரிச்சான் பகுதியில் பாம்பு தீண்டி ஒருவர் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## சைக்கிள்கள்...

துறை மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி மு.உதயானந் தலைமையிலான குழுவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். பிறிதொரு வழக்குத் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட அவரிடம் நடத்தப்பட்ட மேலதிக விசாரணைகளின்போதே, சந்தேகநபர் சைக்கிள் திருட்டுடன் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அவர் வழங்கிய தகவல்களுக்கு அமைய 12 சைக்கிள்கள் மீட்கப்பட்டன. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-26-100)

## சுகாதாரச்...

வீசுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவக்கலாநிதி ப.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.
அத்துடன், பராமரிப்பற்ற முறையில் உள்ள காணிகள் தொடர்பான தகவல்களைத் தந்துதவுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.
(அ-ம-66)

## வழங்குவதா?...

கடந்த ஒரு மாதகாலமாக முன்னெடுக்கப்பட்டுவந்த பணிக்குழாம்மட்ட பேச்சுகள் முடிவுக்கு வந்துள்ளன. இலங்கை அரசாங்கத்தின் புதிய கோரிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் என்பனவும் பணிக்குழாம் மட்ட உடன்பாட்டில் சேர்க்கப்பட்டு நாணயநிதியத்திடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது.
இந்த நிலையிலேயே, பணிக்குழாம் மட்ட உடன்பாடுகளைக் கருத்தில் கொண்டு இலங்கைக்கு மூன்றாம் கட்ட நிதி வழங்குவதா? அல்லது இல்லையா? என்பது தொடர்பில், எதிர்வரும் வாரங்களில் நாணய நிதிய நிறைவேற்றுச்சபை இறுதிக்கட்டப் பரிசீலனையில் ஈடுபடவுள்ளது.
மூன்றாம்கட்ட நிதியுதவியின் கீழ் இலங்கைக்கு 333 மில்லியன் டொலர் வழங்கப்படவுள்ளது. இந்தக் கடனுதவி இலங்கைக்குக் கிடைப்பதற்கான இறுதித் தடைதாண்டலாக சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்றுச்சபையின் அனுமதியே காணப்படும் நிலையில், அந்தச் சபை என்ன முடிவை எடுக்கப்போகின்றது என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.
சர்வதேச நாணயநிதியத்துடனான மூன்றாவது மீளாய்வுக் கூட்டத்தின் போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு வரிச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார நாடாளுமன்றத்தில் வைத்து அண்மையில் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
(அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து
வீட்டு வேலை செய்வதற்கு
பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- **077 700 7731**

(CS/56990) J-1

## புடைவைக் கடைக்கு ஆள் தேவை

திருநெல்வேலி சந்தியில் அமைந்துள்ள புடைவைக் கடைக்கு வேலைக்கு ஆள் தேவை.

வேலை நேரம் 9.00 am- 7.00 pm

தொடர்புகளுக்கு:
**077 789 8862**

# பணிநீக்கம்

சுகுள் நிறுவனத்தில் நிர்வாக ரீதியாக பணியாற்றி வரும் ஊழியர்களில் சுமார் 10 வீத மானவர்களை பணி நீக்கம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

விரைவு - நம்பிக்கை - பாதுகாப்பு

## அண்ணா பொதிகள் சேவை

குறைந்த கட்டணம்
நம்பிக்கையான சேவை

UK 25+ 1,400/-

யாழ்ப்பாணம் - சங்கானை
நெல்லியடி - கைதடி
கிளிநொச்சி - வவுனியா

**075 330 5500 | 076 122 1566**

976, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்

# பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு கீழ் வரும் பணியாளர்கள் உடன் தேவை முன் அனுபவம் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1) **சமையலாளர் :**
(தகுந்த சம்பளம் வழங்கப்படும் வயது எல்லை- 20-55)

2) **சமையல் உதவியாளர்:** (வயது எல்லை- 20-50)

3) **ரூம் (Room) துப்புரவுப் பணியாளர்:**
(முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.)
(வயது எல்லை- 20-50)

தொடர்புகளுக்கு:- **077 251 4984, 077 872 9806**

**நேரில் சமுகம்தரவேண்டிய முகவரி:-**
**195,கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**(195,Temple Road, Nallur, Jaffna)**

(CR/43939) N-1

# வேலையாட்கள் தேவை

1) பாரவூர்தி சாரதி (கொழும்பு, யாழ்ப்பாணம் 3 வருட அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

2) பாரவூர்தி உதவியாளர்

3) பாரவூர்தி போக்குவரத்துச் சேவைக்கான அலுவலக உத்தியோகத்தர் (துறைசார் அனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.)

தொடர்புகளுக்கு:- **0772514984, 0778729806**

**நேரில் சமுகம்தரவேண்டிய முகவரி:-**
**195,கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
(195,Temple Road, Nallur, Jaffna)

(CR/43940) N-1

SLIIT | NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

## SLIIT NorthernUni - Jaffna

NorthernUni in partnership with SLIIT has built a state of the art campus in the heart of Jaffna and the first Institution to offer University of Bedfordshire Degree in Jaffna. We are offering 4 years UGC approved Information Technology and Business Management Programs with specializations. We are seeking candidates for the below roles.

## WE ARE EXPANDING

**Professor/ Associate Professor/ Senior Lecturer / Lecturer (Tenure Track) - Computing**
**Professor/ Associate Professor/ Senior Lecturer / Lecturer (Tenure Track) - Business Management**

### Areas of Expertise - Computing

- Embedded Systems, IoT and Sensor Networks
- Data Mining and Big Data Analytics
- High Performance Computing
- Databases and Information Systems
- Cloud Computing
- Digital Media and Game Development
- Computer Graphics, Image Processing and Computer Vision
- Software Engineering and Enterprise Application Development
- Artificial Intelligence and Machine Learning
- Cybersecurity
- Operating Systems and Networking
- Computational Mathematics
- Human-Centered Computing

### Areas of Expertise - Business Management

- Management
- Finance
- Human Resources Management
- Entrepreneurship
- International Business
- Marketing
- Accounting
- Economics
- Operations and Supply Chain Management
- Business Analytics

### Academic Qualifications and Professional Experience

**Academic Qualifications:**
Candidates must meet the academic qualification requirements as outlined in the University Grants Commission (UGC) of Sri Lanka's stipulated scheme. For detailed information, please visit the official UGC website at www.ugc.ac.lk.

**Professional Experience:**
Applicants should possess demonstrable experience in the relevant field, which will be assessed and verified by the Recruitment Committee of Northern Uni.

### Non-Academic Positions at Northern Uni, Sri Lanka

**Senior Manager - Marketing**
Post Graduate/MBA in Marketing with 12 to 15 years of experience, preferably from an Educational sector.

**Corporate Communications Officer**
Post Graduate/MBA in Marketing / Communications with 12 to 15 years of experience, preferably from an Educational sector.

**Business Assistant**
Post Graduate / MBA in Business Management from any International University with 2 to 4 years of experience (Preferably female candidate, Freshers also can apply). Should have excellent communication skills & Business Analytics / Strategic Skills.

**Placement Officer**
Graduate in Marketing/Communications with 2 to 5 years of experience and should have business development skills in Educational sector.

**Building Maintenance Technician**
Minimum NVQ Level 5 in relevent field with 3 to 5 Years of experience in Electrical, AC and Plumbing.

NorthernUni offers competitive salary and benefits commensurate with qualification and experience. Interested candidates shall send their CVs to **career@northernuni.com** clearly indicating the applied position in the title of the email.

**Visit us at: www.northernuni.lk**

# மொத்த விற்பனை

- **கடைக்காரர்களுக்கு அரிய சந்தர்ப்பம்.**
- **கொழும்பு விலையை விட குறைந்த விலையில் மொத்தமாக பெற்றுக் கொள்ளலாம்.**
- **இலங்கையில் எங்கும் பெற்றுக்கொள்ள முடியாதளவில் குறைந்த விலையில்.**
- **யாழ் நகரில் எங்கும் இல்லாதவாறு**
- **Hand Bag வகைகள்.**
- **School Bag வகைகள்.**
- **Traveling Bag வகைகள்.**
- **Plastic சூட்கேஸ் வகைகள்** (4 சில்லுகளுடன்)

**மேலதிக தொடர்புகளுக்கு**
**077 879 4148**

மேற்படி Bag வகைகளை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர் தேவை.

(CS/56995) J-1

## பிரத்தியேக வகுப்புக்கள்

தரம் 08 - G.C.E (O/L) வரை
கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்
(தமிழ்/ ஆங்கிலம்) மொழிமூலம்
வீடுகளுக்கோ, நிறுவனங்களுக்கோ
நேரில் வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
**076 889 1321, 077 447 3343**

(CS/2067) J-1

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் ஒளி விழா பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-25-9)





சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால், பூநகரி, தெளிகரை, செம்பன்குன்று கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 75 குடும்பங்களுக்கு 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உலர் உணவுப் பொருள்கள் தெளிகரைப் பிள்ளையார் ஆலயத்தில் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25, 66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீட்டர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீட்டர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள். வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
Whats app:-
+61 421 290 240

(CS/56845) J-1

## சிறுநீரகம் தேவை

"O" குருதி வகை சேர்ந்த ஒருவருக்கு "O" குருதிவகை சிறுநீரகம் அவசரமாக தேவை.
42 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
HLA Report இருப்பின் Whatsapp பண்ணவும்.

076 540 6732 (Whatsapp/ Call)
077 723 8937

(CS/56868) J-1

## கடை வாடகைக்கு

[அலுவலக தேவைக்கும் உகந்தது]

இடம் : பருத்தித்துறை வீதி (ஆரிய குளச்சந்திக்கு அருகாமையில்)

Nivishanth Properties

+94 77 917 4358

(CS/56983) J-1

## விற்பனை பிரதிநிதி (Distributor Rep)

இடம் : மானிப்பாய் வீதி, மருதனார்மடம், யாழ்ப்பாணம்.
நேரம் : 8 AM to 11 AM (23.12.2024)

சுயவிபரக் கோவையுடன் சமுகமளிக்கவும்.

தொடர்புகளுக்கு:075 999 7153

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (V) தென்மராட்சியில் பிரபல வர்த்தகர் 1989ம் ஆண்டு உத்தர நட்சத்திரம் சிம்மராசி 4ம் இடத்தில் சூரியன் செவ்வாய் பிறந்த மணமகனிற்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (சீதனம் பெரிதாக எதிர்பார்க்கப்படவில்லை)

தொடர்பு:- 071 436 3253

(CS/56971) JK

## விற்பனைக்கு

- நல்லூரில் 2 பரப்புக் காணி.
- ஊரெழுவில் 12 பரப்பு காணியில் அமைந்த அழகிய வீடு.
- நுணாவில் A9 வீதியோடு 3 3/4 பரப்புக்காணி.
- யாழ். ஆஸ்பத்திரிக்கு அண்மையாக 1 பரப்புக் காணி.

Contact Number:
Divakar Thavavinayakan + 94 77 221 6683

(CS/56977) N-1

## பெண் பராமரிப்பாளர் தேவை

வயதான பெண் ஒருவரை பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்
காலை 7.00 மணி முதல் இரவு 7.00மணிவரை

Fr.P. Chandrasegaram. 077 9935 844

(cs.56981) (N-1)

## SPOKEN ENGLISH

ஆசிரியர்கள் தொடக்கம் ஆங்கிலம் பேச வேண்டிய சகல தொழில் புரிவோர் Grade 7 to GCE O/L, GCE A/L, பட்டதாரிகள் English medium students.

யாழ் இந்து வீதியில்

K.Ganesh B.A 077 766 8725

## வேலையாள் தேவை

எமது கால்நடை உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு ஆண், பெண் வேலையாள் தேவை. ஆண் (Light Vehicle Licence Auto, Motor Cycle உட்பட

JAFFNA EGG CENTER

077 851 1265 / 075 258 9665

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் முகாமைத்துவ பீடத்திற்கு அருகாமையில் G.P.S மைதான வீதியில் 1 1/2 பரப்பு புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

077 656 7844

(CS/56948) J-1

## வாடகைக்கு

யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் வீட்டின் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு. சைவ உணவு சாப்பிடுபவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

076 807 9283

# மரண அறிவித்தல்

## திருமதி பத்மநாதன் செல்லமுத்து (செல்லம்)



தையிட்டிப்புலம், தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் செல்லமுத்து அவர்கள் நேற்று (21.12.2024) சனிக்கிழமை காலை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சாணைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற பத்மநாதன் (ஓவசியர்) அவர்களின் பாசமிகு மனைவியும், ஆனந்தி (சிறுவர் நன்டைத்தை அலுவலர் - வேலணை), முருகானந்தன் (தம்பா - உரிமையாளர் PMT ரேடேஸ், சிற்றி எலெக்ரோணிக்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரணவபவா (தொழிற்திணைக்களம், யாழ்ப்பாணம்), கோவர்த்தனி ஆகியோரின் அன்பு மாமியாரும், லதுசன், காருண்யா, கம்சிகன், கம்சிகா, கனிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சின்னப்பிள்ளை, மாப்பாணர், சுப்பிரமணியம், சேதுப்பிள்ளை, கந்தையா, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு 26.02.1933 — இறப்பு 21.12.2024

478, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
மகள் - 077 867 2232
மகன் - 077 303 9555

(CS/56985) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08


# சஞ்சீவி

Registered as a Newspaper

யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரு— மேனை
வினையுலப்ப வேறாகி வீழ்வார் தாங் கொண்ட
மனையாளை மாற்றார் கொள

— நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2055 மார்கழி 07 ஞாயிற்றுக்கிழமை (22 சிகரம் :233






# யாழ்ப்பாணத்தில் எலிக்காய்ச்சல்; பின்னணி என்ன?

திருமதி யானுதி தர்சன்
*விரிவுரையாளர்,*
*தாதியியல்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*


யாழ்ப்பாணத்தில் எலிக்காய்ச்சல் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை கடந்தவாரம் சடுதியாக அதிகரித்து எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது. இந் நோய் காரணமாக இதுவரை சுமார் 120 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 8 இறப்புகள் ஏற்பட்டுள்ளன. உலகளாவிய ரீதியில் ஆண்டுதோறும் எலிக்காய்ச்சல் காரணமாக சராசரியாக 1.03 மில்லியன் மக்கள் தொற்றுக்குள்ளாவதுடன் 58,900 இறப்புகளும் ஏற்படுகின்றன. கடந்த வருடம் (2023) இலங்கையில் 203 எலிக்காய்ச்சல் இறப்புகள் பதிவானதுடன் இறப்பு வீதம் 2 வீதமாக பதிவாகியிருந்தது. இலங்கையிலே எலிக்காய்ச்சல் தொற்றுக்குள்ளானவர்கள் பல மாவட்டங்களிலிருந்து இனங்காணப்பட்டுள்ளார்கள் (கொழும்பு, கம்பஹா, களுத்துறை,கண்டி, காலி, மாத்தறை, குருநாகல், கேகாலை, மாத்தளை) யாழ்ப்பாணம் உலர் வலயமாக இருந்த போதும் தற்போது அதிகளவான மழை வீழ்ச்சியால் உண்டான வெள்ளப்பெருக்கே, எலிக்காய்ச்சல் சடுதியாக பரவுவதற்கு காரணமானது.



அதிகளவான மழைவீழ்ச்சி மற்றும் ஈரப்பதன் என்பன இந் நோய்த் தொற்றின் பரம்பலை தீவிரமடையச் செய்கின்றன. பருவகால மழையின் போது ஏற்படும் வெள்ளத்தின் காரணமாக இந் நோய்த் தாக்கம் ஏற்படுகின்றது. பொதுவாக பங்குனி தொடக்கம் வைகாசி வரையான காலப்பகுதியிலும் ஐப்பசி தொடக்கம் மார்கழி வரையான காலப் பகுதியிலும் வழமையை விட எலிக்காய்ச்சல் அதிகரித்து காணப்படும்.

பொதுவாக 20 முதல் 49 வயதுக்குட்பட்ட இளம் வயது ஆண்களிடையே விகிதாசாரமற்ற முறையில் அதிகளவில் நோய்த் தொற்றுகள் மற்றும் இறப்புகள் ஏற்படுகின்றன. தொற்றுக்குள்ளானவர்களில் 5 - 10 வீதங்களுக்கு மாத்திரமே மரணத்தை ஏற்படுத்தக் கூடிய பாரதூர சிக்கல்கள் ஏற்படலாம். எலிக்காய்ச்சல் மிகவும் கடுமையான ஆனால் சிகிச்சை அளிக்கக் கூடிய ஒரு நோயாகும். ஆரம்பத்திலே நோயைக் கண்டறிவதன் மூலமும் முடிந்தளவு ஆரம்பத்திலேயே வினைத்திறனான நுண்ணுயிர் கொல்லி மருந்துகளை உள்ளெடுப்பதன் மூலமும் இந் நோயின் தீவிரத்தைக் குறைக்கமுடியும்.

எலிக்காய்ச்சல் என்பது "லெப்டோஸ்பைரா" எனப்படும் ஆபத்தான பக்றீரியா மூலம் பரப்பப்படும் ஒரு நோயாகும். பிரதானமாக எலி மற்றும் மூஞ்சூறு ஆகியவற்றின் சிறுநீர் மூலமே இந் நோய்க் கிருமியானது சூழலுக்கு விடுவிக்கப்படுகின்றது. இதனை விட மாடு, ஆடு ,நாய், பூனை, பன்றி, குதிரை, செம்மறி ஆடு மற்றும் காட்டு விலங்குகள் ஆகியவற்றின் தொற்றுக்குள்ளான சிறுநீர் மூலமும் இந்தக் கிருமி சூழலுக்கு விடுவிக்கப்படலாம். இந் நோய்க் கிருமியானது நேரடியாகவோ மறைமுகமாகவோ மனித உடலைச் சென்றடைகின்றது. உராய்வு அல்லது காயங்களின் ஊடாகவோ மூக்கின் வழியாகவோ வாயின் வழியாகவோ கண்ணின் வழியாகவோ இந் நோய்த்தொற்று ஏற்படலாம். அதனை விட கிருமித் தொற்று ஏற்பட்ட நீர் நிலைகளில் குளிப்பதனாலோ நீர் அருந்துவதனாலோ அல்லது மண்ணில் விளையாடுவதனாலோ அல்லது தொற்று ஏற்பட்ட உணவை உட்கொள்வதனாலோ நோய்த் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. ஒரு மனிதனிலிருந்து இன்னொரு மனிதனுக்கு தொற்றும் வாய்ப்பு மிகவும் அரிது.




கிருமித் தொற்று ஏற்பட்டு 5 முதல் 14 நாட்களுக்கு பின்னரே நோய்அறிகுறிகள் தென்பட ஆரம்பிக்கும். சில வேளைகளில் 2 முதல் 30 நாட்களின் பின்னும் இது வெளிப்படலாம். இது சாதாரண சளிக்காய்ச்சலோடு ஆரம்பித்து மிகப் பாரதூரமான/ இறப்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு கொடிய நோயாகும். டெங்கு இன்புளுவன்சா போன்ற நோய் அறிகுறிகளை ஒத்திருப்பதால் இந் நோயை கண்டறிவதற்கு போதியளவு ஆய்வுகூட பரிசோதனைகள் அவசியமாகும். இந் நோயின் பொதுவான நோய் அறிகுறிகளாக, குளிர் காய்ச்சல், தலையிடி, கண் சிவப்பாதல், தசைப் பிடிப்பு (கால் மாற்றும் நாரிப் பகுதி) மற்றும் மஞ்சள் காமாலை ஆகியன காணப்படும். இந் நோயின் பாரதூரமான விளைவுகளாக சிறுநீரக செயலிழப்பு, இதயம் செயலிழப்பு மற்றும் மூலத்தினு டாக இரத்தம் வெளியேறுதல் ஆகியன காணப்பட்டு இறப்பு நேரிடலாம்.

பொதுவாக நோய் அறிகுறிகள், சலப் பரிசோதனை மற்றும் இரத்தப் பரிசோதனைகள் மூலமாக இந் நோய்த் தொற்றினை இனம் காணலாம். இருப்பினும் ஆய்வுகூட பரிசோதனைகள் மூலமே இந் நோய்த் தொற்று இருப்பதை உறுதிப்படுத்த முடியும். இந் நோய்க்கான தனித்துவமான ஆய்வுகூட பரி சோதனைகளாக ஆய்வு (Microscopic Agglutination Test) மற்றும் PCR(Polymerase Chain Reaction) ஆகியன காணப்படுகின்றன. இப் பரிசோதனைகளுக்கான செலவு மற்றும் நேரம் அதிகமாக தேவைப்படுவதால் இந் நோயைக் கண்டறிந்து உறுதிப்படுத்துவது மிகவும் கடினமானதொன்றாகவே உள்ளது. எலிக்காய்ச்சல் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு அதிகம் உள்ள தொழில் வர்க்கங்களான விவசாயிகள், மீனவர்கள், வடிகால் மற்றும் சுரங்க துப்புரவுப் பணியாளர்கள் முற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது முக்கியமானதொன்று. பின்வரும் வழிமுறைகள் மூலம் எலிக்காய்ச்சலின் பரவலைக் குறைத்துக் கொள்ள முடியும்.

1. சுற்றுப்புறச் சூழலை துப்புரவாக வைத்திருப்பதன் மூலம் எலி போன்ற கொறித்துண்ணிகளின் பெருக்கத்தை குறைத்தல்.
2. சிறுவர்கள் விளையாடும் இடங்களிலிருந்து மிருகங்களை விலக்கி வைத்தல்.
3. காயங்களுக்குள் தண்ணீர் உட்புகாதவாறு மருந்து கட்டுதல்
4. தோட்ட மற்றும் வெளிப்புற வேலையின் போது நீளக் காற்சட்டை, கையுறை பூட்ஸ் சப்பாத்து என்பவற்றை அணிதல்
5. கொதித்தாறிய நீரைப் பருகுதல். வடிகட்டிய நீரிலும் பார்க்க கொதித்தாறிய நீரைப் பருகுவதே சிறந்தது.
6. வெள்ளத்துக்குள்ளே நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ளல்.
7. தொற்றுக்கான சாத்தியக்கூறு அதிகம் உள்ளவர்கள் மருத்துவ ஆலோசனையின்படி தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளல்.
8. வெள்ளம் மற்றும் கடுமையான மழைக் காலங்களில் நீர்நிலைகளில் நீந்துவதை/ குளிப்பதை தவிர்த்தல்.

பொது மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வினாலும் நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டதனாலும் தற்போது நோயின் தாக்கம் வெகுவாக குறைவடைந்துள்ளது. எலிக்காய்ச்சல் என்பது புதிய ஒரு நோய் அல்ல. யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே குறைந்த எண்ணிக்கையில் காணப்பட்ட இந் நோய்த் தொற்று அதிகளவான மழைவீழ்ச்சியால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினாலேயே திடீர் அதிகரிப்பைக் காட்டியுள்ளது. சரியான தடுப்பு முறைகளை பின்பற்றுவதன் மூலம் நோயின் பரவலை குறைத்து ஆரோக்கியமாக வாழ்க்கையை வாழ முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சி: 75 ஆண்டுகள் ?

நிலாந்தன்

தமிழரசுக் கட்சிக்கு 75 வயது. கடந்த புதன்கிழமை அதை விமரிசையாகக் கொண்டாட முடியவில்லை என்று அதன் தொண்டர்கள் சிலர் கவலைப்பட்டுக் கொண்டார்கள். ஏன் கொண்டாட முடியவில்லை? 75 ஆண்டுகள் எனப்படுவது ஒரு மனிதனின் முழு ஆயுளுக்குக் கிட்டவரும். இந்த 75ஆண்டு காலப்பகுதிக்குள் தமிழரசுக் கட்சி சாதித்தவை எவை? சாதிக்காதவை எவை ?

இப்பொழுதுள்ள தமிழ்க்கட்சிகளில் பெரிய கட்சி அது.நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களை வென்றிருக்கும் தமிழக்கட்சியும் அது.ஒரு வித்தில் தாங்களே தமிழர்களின் தலைமைச் சக்தி என்ற பொருள்பட சுமந்திரன் கூறிக்கொள்வார்.கடந்த 15 ஆண்டுகளாக தமிழ்மக்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் முடிவுகளை எடுக்கும் பொறுப்பில் இருந்த ஒரு கட்சி எப்படிப்பட்ட முடிவுகளை எடுத்தது?அந்த முடிவுகளின் விளைவாக தமிழ்மக்களுக்கு கிடைத்தவை எவை? கிடைக்காதவை எவை?



இந்தக் கேள்விக்கு ஒரு குறியீட்டுப் பதிலைச் சொல்லலாம். தந்தை செல்வாவின் நினைவுத் தூபி அமைந்திருக்கும் வளாகத்தைச் சுற்றிப்பார்த்தால் கட்சியின் நிலையை, கட்சியால் வழி நடத்தப்பட்ட அரசியலின் நிலையை அது குறியீடாக வெளிப்படுத்தும். அந்தச் சிலையைச் சுற்றியிருக்கும் வளாகம் தொடர்ச்சியாக பராமரிக்கப்படுவதில்லை. பெரும்பாலான காலம் அதைச் சுற்றி பற்றைகள் புல்,பூண்டுகள் மண்டிக் கிடக்கும். அந்தச் சிலைக்கு ஏறிப்போகும் உலோகப் படிக்கட்டு துருப்பிடித்துக் கிடக்கிறது. அந்த வளாகத்தின் வாசலில் உள்ள கேற், அதன்பூட்டு எல்லாமே துருப்பிடித்துள்ளன. அவ்வப்போது அந்தச் சிலைக்கு மரியாதை செலுத்தச் செல்லும் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் அதைக் குறித்த எந்த விவஸ்தையுமின்றி அந்தப் பற்றைகளின் பின்னணியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள். அந்த வளாகத்தைச் சுத்தமாக அழகாகப் பேண வேண்டும் என்று ஏன் யாருக்கும் தோன்றவில்லை? கட்சியின் ஸ்தாபகரின் சிலை, அவரை தந்தை என்று அழைக்கிறோம். ஆனால் அந்தச் சிலையை ஒரு நினைவிடமாக அதற்குரிய மதிப்போடு பேண ஏன் கட்சியால் முடியவில்லை?

இது ஒரு குறியீடு.கட்சியின் தற்போதைய நிலையைக் காட்ட இது உதவும். தமிழரசு கட்சி தூர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தில் நிற்கின்றது. கட்சியின் தலைவர் யார் என்பதில் தடுமாற்றம். கடந்த 18ஆம் திகதி வவுனியாவில் நடந்த மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சி எந்தளவுக்குச் சிதைந்து கொண்டிருக்கிறது என்பதனைக் காட்டியது.

கட்சிக்குள் ஒன்றை மற்றது பிடித்துத்தின்னும் பகைக்குழுக்கள் தோன்றி விட்டன.இந்தக் குழுக்களுக்கு இடையிலான பகையானது கட்சியின் வெளி எதிரிகளுடன் உள்ள பகையைவிடவும் மூர்க்கமானதாகவும் பழிவாங்கும் உணர்ச்சி மிக்கதாகவும் காணப்படுகின்றது.2024 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் 75 ஆண்டுகளில் மிகத் தோல்விகரமான ஆண்டுகளில் ஒன்று. கட்சிக்காரர்களே கட்சியை நீதிமன்றத்தில் நிறுத்திய ஆண்டு.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒரே சுவரொட்டியில் ஒன்றாகத் தோன்றிய கட்சி முக்கியஸ்தர்கள், உள்ளூரில் ஒருவர் மற்றவருக்கு எதிராகப் பிரசாரம் செய்தார்கள்.ஒருவர் மற்றவருக்கு வாக்களிக்க வேண்டாம் என்று மக்களிடம் கேட்டுக் கொண்டார்கள்.உட்பகை கட்சியை படிப்படியாகத் தின்று கொண்டிருக்கிறது.கட்சி ஒரு கட்டுக்கோப்பான உருகிப்பிணைந்த கட்டமைப்பாக இல்லை. அங்கே கூட்டுணர்வு இல்லை.

ஆனால் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் பகுதிகளில் தமிழரசுக் கட்சிக்குத்தான் அதிக ஆசனங்கள் கிடைத்தன.அதனைக் கட்சி ஒரு பெருமையாகக் கருதுகின்றது. ஆனால் துயரம் என்னவென்றால், தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த அதேயளவு ஆசனங்கள் தமிழர் பகுதிகளில் அரசாங்கத்திற்கும் கிடைத்திருக்கின்றன என்பதுதான். அரசாங்கத்தின் துணை வெளிவிவகார அமைச்சரும் திருகோணமலைத் தமிழருமாகிய அருண் ஹேமச்சந்திர அண்மையில் ஓர் ஊடக நேர்காணலில் கேட்கிறார் "தமிழ்த் தரப்பு என்பது இப்பொழுது யார்" என்ற பொருள்பட. ஏனென்றால் அரசாங்கத்திடம் 28 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்டு. தமிழர் தாயகத்தில் மொத்தம் எட்டுப் பேர்.இவர்கள் அனைவரும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை.தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்கள் மொத்தம்10 பேர்தான்.அர்ஜுனா எந்தப் பக்கம் நிற்பார் என்று தீர்மானமாகக் கூறமுடியாது.எனவே மொத்தத் தமிழ்த் தேசியப் பிரதிநிதித்துவம் பத்தாகச் சுருங்கியுள்ளது.அதனால்தான் அருண் ஹேமச்சந்திர கேட்கிறார்,எது தமிழ்த் தரப்பு என்று. அதாவது தமிழ்த் தேசியத் தரப்பு மட்டும் இப்பொழுது தமிழ்த் தரப்பு அல்ல என்ற பொருளில்.

தமிழரசியலுக்கு குறிப்பாக, தமிழ்த் தேசிய அரசியலுக்குத் தலைமை தாங்கும் ஒரு கட்சி என்று பெருமை பாராட்டிக்கொள்ளும் ஒரு கட்சியானது இதற்குப் பதில்சொல்ல வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 22 ஆசனங்களை கொண்டிருந்தது.அது இப்பொழுது பத்தாகச் சுருங்கிவிட்டது.இது தோல்வி. ஆனால் கட்சிக்காரர்கள் கடந்த தேர்தலில் கிடைத்த அற்ப வெற்றியைக் கொண்டாடுவதாகத் தெரிகிறது.ஒட்டு மொத்த தமிழ்த்தேசிய ஆசனங்கள் குறைந்திருக்கின்றன. நாடாளுமன்றத்தில் ஒரு தேசமாக தமிழ்மக்கள் மேலும் மெலிந்திருக்கிறார்கள்.

கடந்த மாதத்தின் நடுப்பகுதி வரையிலும் முழு நாட்டிலிருந்தும் வெளியேறியவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்தை விட அதிகம். இதில் எத்தனை பேர் தமிழர்கள்?அவர்கள் வெளியேறுவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் அது தமிழ்த் தேசியவாத அரசியலின் தோல்விகளில் ஒன்று. வாக்காளர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

தன்னைத் தலைமை தாங்கும் சக்தியாகக் கருதும் தமிழரசுக் கட்சி இவை எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்து தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலை;தேசத்தைத் திரட்டும் அரசியலை ஏன் முன்னெடுக்கவில்லை? மாறாக,கட்சிக்காரர்களே ஒருவர் மற்றவருக்கு எதிராக கட்சியை நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தும் ஒரு நிலைமை ஏன் தோன்றியது?மூத்த உறுப்பினராகிய சிவஞானத்தை,இளம் நாடாளுமன்ற உறுப்பினராகிய அர்ஜுனா "நீங்கள் யார்?" என்று கேட்கும் ஒரு நிலைமை தமிழரசியலில் ஏன் தோன்றியது?

இந்த தோல்விகள் அனைத்துக்கும் முழுப்பொறுப்பு முதலாவதாக சம்பந்தர். இரண்டாவதாக சுமந்திரன்.மூன்றாவதாக மாவை.நாலாவதாக,இவர்கள் அனைவருடைய செயல்களையும் ஆதரித்த அல்லது தங்களுக்குள் [illegible] கொண்டு எதிர்க்காமலிருந்த எல்லா மூத்த உறுப்பினர்களும் பொறுப்பு. சிறீதரனும் பொறுப்பு.இந்த ஆண்டின் தொடக்கத்தில் கட்சித் தொண்டர்கள் சிறீதரனின் கையில் கொடுத்த பொறுப்பை அவர் சரியாகக் கையாளவில்லை. அவர் எதற்கோ தயங்குகிறார். இதுதான் 75 ஆவது ஆண்டு முடிவில் கட்சியின் நிலை. கட்சிக்குள் உறுதியான தலைமைத்துவம் இல்லை. கட்சி இரண்டாகி நிற்கிறது.வாக்காளர்களின் இன உணர்வுக்கு நெருக்கமாக ஒரு பகுதி. கொழும்பை நோக்கிச் சாயும் இன்னொரு பகுதி.தமிழரசு கட்சிக்குள் காலாகாலமாக இந்த இரண்டு போக்குகளும் இருந்தன. ஒரு போக்கு வாக்காளர்களுக்கு நெருக்கமாக இருப்பது.இன்னொன்று கொழும்பை நோக்கிச் சாய்வது. இந்த இரண்டு போக்குகளினதும் கலவைதான் தமிழரசுக் கட்சி.

யாழ்.பல்கலைக்கழகத்தின் மெய்யியல் துறையின் தலைவராக இருந்த கலாநிதி ராமகிருஷ்ணன் சொல்வாராம் "ஒரு பனங்காட்டானைத் தலைவனாகத் தெரிந்தால் அவர் வாக்காளர்களின் சொற் கேட்பார்" என்று.அமிர்தலிங்கம் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டபோது,அவர் இவ்வாறு கூறியுள்ளார்.அவர் பனங்காட்டான் என்று கருதியது யாழ்ப்பாணத்தவர்களை மட்டுமல்ல.தன் வாக்காளர்கள் மத்தியில் வீடு வாசல்,சொத்துகளைக் கொண்டிருக்கும் மக்கள் பிரதிநிதியைத்தான். கொழும்புமையத் தமிழ்த் தலைமைகளுக்கு எதிராகவே அவர் அவ்வாறு கூறுவாராம்.

இந்த இரண்டு போக்குகளும் ஒன்று மற்றதை இட்டு நிரப்பி கட்சியின் தலைமைப் பீடத்தை நிர்வகித்து வந்தன.ஆனால் கடந்த 15 ஆண்டுகளில் இந்த இரண்டு போக்குகளுக்கும் இடையிலான மோதல் கட்சியை உருக்குலைத்து விட்டது.இது இரண்டாயிரத்தி ஒன்பதுக்குப் பின்னரான தமிழ் கூட்டு உளவியலின் விளைவு.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் கட்சிக்குள் நடந்த தேர்தலில் சுமந்திரன் கட்சிக்காரர்களால் தோற்கடிக்கப்பட்டார். அந்த தோல்வியை அவர் நாகரீகமாக ஏற்றுக்கொண்டது போல வெளியில் காட்டிக்கொண்டார்.ஆனால் அவர் அந்தத் தோல்வியை தாங்கிக் கொள்ளவில்லை என்பதைத்தான் பின்வந்த நடவடிக்கைகள் நிரூபித்தன.ஆண்டின் தொடக்கத்தில் கட்சிக்காரர்கள் அவரை தோற்கடித்தார்கள்;ஆண்டின் முடிவில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அவரைத் தோற்கடித்தார்கள். கட்சிக்குள் தலைமைப் போட்டியை அவர் கையாண்ட விதத்தை தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அந்தத் தீர்ப்புக் காட்டியதா?

ஆனால் இரண்டு தோல்விகளையும் அவர் ஜீரணித்துக் கொண்டதாகத் தெரியவில்லை.அவற்றிலிருந்து அவர் கற்றுக்கொண்டதாகவும் தெரியவில்லை. ஏனென்றால் கடந்த 18ஆம் திகதி வவுனியாவில் நடந்த கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அதைத்தான் உணர்த்துகின்றது.அதாவது கட்சி தொடர்ந்தும் நீதிமன்றத்தில் நிற்கப்போகிறது என்று தெரிகிறது. மருத்துவர் சிவமோகனும் புதிதாக ஒரு வழக்கைப் போட்டிருக்கிறார். எனவே கடந்த 75 ஆண்டுகளையும் கூட்டிக்கழித்துப் பார்த்தால் தமிழரசுக் கட்சி ஒரு வெற்றி பெறாத கட்சிதான்.அது கட்சியாகவும் தோற்றுவிட்டது.தமிழ் மக்களையும் தோற்கடித்துவிட்டது.சம்பந்தர் இறக்கும்பொழுது தோல்வியுற்ற தலைவராகவே இறந்தார். யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா கலையரங்கில் அவருடைய பூதவுடலுக்கு கிடைத்த இறுதி மரியாதை அதற்குச் சான்று.ஆனால் அதிலிருந்தும்கூட கட்சியின் மூத்த தலைவர்கள் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

கடந்த 15 ஆண்டுகாலம் என்பது தமிழரசுக் கட்சி மட்டுமல்ல பெரும்பாலான தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இறந்த காலத்தில் இருந்து கற்றுக்கொள்ளாத ஒரு காலம்தான்.அவர்கள் தங்கள் கட்சிகளையும் தோற்கடித்திருக்கிறார்கள்; தமிழ் மக்களையும் தோற்கடித்து விட்டார்கள்.தேசத்தைத் திரட்டா விட்டால் கட்சிகளையும் திரட்டமுடியாது என்பதனை நடந்துமுடிந்த தேர்தல் நிரூபித்திருக்கிறது. இப்படிப்பட்டதோர் தோல்விகரமான அரசியல் பின்னணியில், தமிழரசுக் கட்சியின் 75ஆவது ஆண்டு நிறைவு என்பது அது தன் இறுதி இலட்சியமாகிய சமஷ்டியை வெல்லத்தவறிய மற்றொரு ஆண்டுதான்.அதாவது,சமஷ்டியை அடையாத 75ஆவது ஆண்டு. கட்சி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் ஓராண்டு. தமிழ்த் தேசியப் பிரதிநிதித்துவம் மேலும் சுருங்கிப்போயிருக்கும் ஓராண்டு.நிச்சயமாக அது கொண்டாடப்படத்தக்க பவள விழா ஆண்டு அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவசரமா ஒரு கடுதாசி

வணக்கம்
வாக்காளப்பெருமக்களே!


உங்களுக்குத் தான் அடிக்கடி கரைச்சல்தாறன் போலை கிடக்கு. கரைச்சலைத் தந்து உங்கடை கண்ணைத் திறக்கவேணும் எண்டதுதான் அடியேன்ரை ஆசை. உங்களோடை கதைக்க நினைக்கிறது மாதிரி அரசியல் வாதியளோடையும் கதைக்கவேணும். அவையளிட்டை பிரச்சினையளைச் சொல்லி எங்கடை மக்களுக்கு ஏதாச்சும் செய்யலாமெண்டால் .... ஊஹூம்.....!!! நடக்காது எண்ட சலிப்பிலைதான் அரசியல்வாதியளுக்குச் சொல்லாமல் உங்களிட்டை சொல்லுறன். அரசில்வாதியளின்ரை கண்ணைத் திறக்கலாமெண்டுதான் முதலிலை அவையளின்ரை கண்ணைத் தேடினான். காணேல்லை, கண்டு பிடிப்பமெண்டால் அதுவும் முடியேல்லை. சிவபெருமான்ரை கண்ணைப் போலை மூண்டாவது கண் எங்கையாச்சும் கிடக்கோ எண்டு அதையும் தேடினான். அதிலையும் எனக்குத் தோல்விதான் மிச்சம். அப்ப அவைக்குக் கண் இல்லை விழிப்புணர்வை ஏற்படுத்த ஏலாது எண்ட முடிவுக்கு வந்திட்டன். நான் இல்லை, பலர் வந்திட்டினம்.

ஜனாதிபதி அநுர இந்தியாவுக்குப் போய் கதைச்ச விவரங்கள் பற்றிப் பேப்பர்காரர் பலதையும் போட்டிருந்தவை. அவரைத் துருவித் துருவி அங்கையுள்ள பேப்பர்காரர் பல அரசியல் சிக்கல்களை அவிக்கிற மாதிரியும் அதுகளை குழப்புற மாதிரியும் கேள்வி கேக்கினம். அதானியை என்ன செய்யப் போறியள் எண்டது துவக்கம் சீனாவை என்ன செய்யப் போறியள் ? பதின்மூண்டை என்ன செய்யப் போறியள் ? மாகாணசபை எலக்சன் எண்டு பலதையும் கேட்டவை. அவர் வடிவா எல்லாத்துக்கும் பதில் சொல்லிப் போட்டுத்தான் வந்திருக்கிறார். அதே பேப்பர்களில எங்கடை தமிழ் அரசியல்வாதியளைப் பற்றியும் ஒரு செய்தி.அவை கனடாவுக்குப் பயணம் எண்டு. நான் தெரியாமல்தான் கேக்கிறன், ஏன் எங்கடை அரசியல் பிரச்சினையள் எல்லாம் கனடாவோடையே? கனடாவிலை எங்கடை தமிழ்ச் சனம் இருக்கு. அதோடை மனித உரிமை பற்றிப் பேசுற நாடுகளிலை கனடாவும் ஒண்டு, அவ்வளவுதான்.

ஜனாதிபதி அநுர இந்தியாவுக்குப் போனதிலை ஞாயம் இருக்கு. இந்தியா எங்கடை அண்டை நாடு. பக்கத்து வீட்டோடை வேலிச் சண்டை இருக்கிற மாதிரி அவையளோடைதான் கனக்கப் பிரச்சினை இருக்கு. மீன்பிடி தொட்டுக் கஞ்சாக் காய்ச்சல் வரை கன்னகப் பிரச்சினை. அவையளாலை கலை கலாசாரப் பண்பாடுகள் தொடர்பாக் கன சீரழிவுகள் எங்கடை நாட்டிலை இருக்கு. ஒரு வகையிலை அவை ஒரு குப்பைத் தொட்டியா எங்கடை நாட்டைப் பாவிக்கினம் எண்டது எல்லாருக்கும் தெரியும்.தென் இந்திய சினிமா எங்கடையளைக் குழப்பிற மாதிரி ஹிந்திச் சினிமா சிங்கள ஆக்களைக் குழப்புது எண்டும் அநுரவுக்குத் தெரியும். அதாலை அநுர அங்கை போறதுதான் முதல் தேவை. அதோடை புது வீடு ஒண்டை எடுத்து அல்லது கட்டிக் குடிபோனால் முதலிலை அக்கம் பக்கம் உள்ள வீடுகளுக்குப் போய் "அன்ரி, அங்கிள்" எண்டு உறவாடித் தொடங்குறதுதானே வழமை. அதாலை அநுர இந்தியாவுக்குப் போனதுதான் சரி. ஆனால் எங்கடை தமிழ் அரசியல்வாதியள் கனடாவுக்கு முடிச்சுக் கட்டினம்.

"ஏன் எங்கடை தமிழ் அரசியல்வாதியள் கனடாவுக்கு அவசரப்பட்டுப் போயினம்?' எண்டு சுப்பையாண்ணையிட்டைக் கேட்டன். அங்கைதான்ரா பசை இருக்குது எண்டு சொன்னார். 'அதென்ன பசை? அந்தப் பசை இஞ்சை இல்லையோ? அதை இஞ்சை வாங்கேலாதோ?' எண்டு நான் கேட்டன். அதுக்கு அவர் "உனக்கு ஒண்டும் தெரியாது.பெரிய இடத்துக் கதையளைக் கதைச்சு முதுகைப் புண்ணாக்காமல் போய் பாக்கிற வேலையைப் பார். உதுக்குத்தான் படிக்க வேணும்" எண்டு சொல்லிப் போட்டுப் போறார். ஆனால் இப்பிடிச் சொன்ன சுப்பையாண்ணை முதலாம் வகுப்புக்கூடப் படிக்கேல்லை எண்டதுதான் பகிடி. ஆனால் பாவம் சுப்பையாண்ணை , அவர் படிக்காட்டியும் பார்லிமெண்டுக்குப் போயிருந்தால் கட்டாயம் "கலாநிதி" பட்டத்தைப் படிக்காமல் வாங்கி இருப்பார் கண்டியளோ.

இப்படிக்கு
*அப்பாவி அன்னமுத்து*





# அனார்

## சில குறிப்புகள்

ரஜிதா

உணர்வுக்குள்ளே மலையும் வனமும் பிரபஞ்சவெளியும் உண்டு! அனார். அச்சிறு கண்களின் வழி என்னுலகத்தை நிரப்பி அள்ளிக்கொடுக்கும் தாய்மையின் கருணை. தன்னைக்கண்டடைதலின் பிரகாரம் வாழ்வில் ருசிகொண்டவோர் மந்திரப்பேழை. கவிதையின் மொழிகளுக்குள் தழைத்து வாழ்வென்றாகியிருக்கும் இவ் உயிரைத் தூக்கிச்சுமக்கும் துணிவையும், தைரியத்தையும் தன் எழுத்துகளின் வழி சேர்ப்பித்த என் மூத்தவருக்கு வாழ்த்துகளும், நன்றியும், அன்பு முத்தங்களும். எத்தனையாயிரம் பாடுகளைக் கொண்டலையும் வாழ்விது. அனாரின் கண்கள் வழி நானடையும் கனவென்பது மொழியில் திளைத்து அலையும் வேட்கை. பிறந்த அக்கணத்தில் துடிக்கும் உயிர்களின் மென்னசைவுகள், தொடுகையின் ஸ்பரிசத்தை தருக்கி நிற்பவை, பூமி பதியாத ஒவ்வொரு பாதங்களிலும் இருந்து திறக்க வேண்டிய வழித்தட விரிவு.

1



சமூகத்தின், பாழான பல நம்பிக்கைகளில் ஊறிப்போய்விடாது தன் நிலையறிந்து, தான் யாரென்றறிந்து பெருங்கனவுடன் விரித்த முதற்கனவின் ஒரு சோடி இளஞ்சோடிச் செட்டைகளுடன் இப்பிரபஞ்சத்தின் மேன்மையைக் காணும் விழிகள் அனாருடையது. பாழ் வெளியின் இன்மையைப் பாடும்போதிலும், கேடு காலங்களில் வாஞ்சையோடு அள்ளியெடுத்து தலைகோதி மெய்நீவி இன்னாரென்று அறியாத அத்தனை நல்லுயிர்களுக்குமான வாழ்விற்கென தன்னை அர்ப்பணித்து நிற்கின்றது அவருடைய அகமொழி. அவருள் விரியும் நிலமும், வானும் தனித்துவமானவை. உள்ளங்கைகளுக்குள் அடங்கும் சிறு உயிர்களையும் அணைத்துக்கொள்ளும் அனார் பட்சிகளுக்கே உரித்தான தனித்துவமான 'மீயடுக்கு மூளை' கொண்டலைபவர்.

தாய்மை இப்பிரபஞ்சம் ஆக்கியளித்த ஆதி உணர்வு. எங்கெல்லாமோ அலைந்து திரிந்த வாழ்வின் அதி அற்புதமான தருணங்களையோ, விநோதங்களையோ சொல்லில் கனமேற்றி ஒப்புவிக்கக் கிடைத்த ஓருயிர் தாய். கவிதைகளின் அறிமுகக் காலங்களில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று. ஏழு, எட்டு வயதிருக்கும். எங்கள் வீட்டிலிருந்த கள்ளிப் பெட்டிக்குள் பத்திரப்படுத்தி வைத்திருந்த 'அம்மா' பற்றிய கவிதையொன்றின் வரிகள் இன்றுவரைக்கும் என்னை அலைச்சலுற வைக்கின்றன. 1989 -1990 காலப்பகுதியில் அப்பா இந்தியாவில் இருந்து வரும்போது பத்திரிகையொன்றில் இருந்து வெட்டி 'லெமினேட்' செய்துவைக்கப்பட்டிருந்த அக்கவிதை என் கனவின் தொடக்கமென உணரமுடிகின்றது. வாழ்வைத் தனியாகக் கடக்க வேண்டிய நிர்ப்பந்தங்களின் போதெல்லாம் வெப்பியாரமொன்று வரும். அப்பிணிக்குள் உழலும் துயரை ஏற்றுக்கொள்வதற்கும், நத்தை வேகத்திலேனும் கொஞ்சம் நகர்வதற்கும் அதுவே என் நனவிலி மனதுக்குள் நுழைந்த தோத்திரமாக இருக்கின்றது.

முதல் வாசமுணர்ந்த அன்பின் பெருங்கருணைகூட உணர்வாகவும், நினைவாகவுமே தங்கும் என்பது எவ்வளவு பெரிய அபத்தம். நாம் யாரென்று உணர எம்முடன் தனியாகவே பயணிக்கவேண்டுமென்பதுவே அவ் அபத்தமும், வாழ்வும், நெறியும். மீண்டும் செல்லத்துடிக்கின்ற. ஆனால் என்றைக்கும் நிகழப்போவதில்லை என்றான பல கோடிக் கனவுகளின் ஏக்கம் அது.

*(அடுத்த வாரமும் பேசுவோம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
22 டிசெம்பர் 2024



# சிலப்பதிகாரம் காட்டும் வணிகம்

பண்டைய தமிழ் இலக்கியங்களின் பல்பரிமாணத் தன்மையினை விளக்கும் முகமாக 'சிலப்பதிகாரம் காட்டும் வணிகம்' என்ற தலைப்பிலான இந்தக் கட்டுரைத் தொடர் சஞ்சீவியில் இந்தவாரம் ஆரம்பமாகியுள்ளது. பண்டைய தமிழர் மருத்துவம், பண்டைக்கால தமிழர்களின் வணிகமும் வணிக நடைமுறைகளும், தமிழர் பண்பாடு, பண்டைய தமிழரின் சமூக நோக்கு, பண்டைய இலக்கியங்களின் பொருளாதாரக் கருத்துகள், அறக் கருத்துகள், சங்ககாலப் பெண் கவிஞர்களின் பார்வையில் பண்டைய தமிழர் வாழ்வியல், சமூக வாழ்வியலில் பெண்களின் வகிபாகம் போன்ற விடயங்களை இந்தக் கட்டுரைத்தொடர் வாராவாரம் வாசகர்களுக்குத் தரவுள்ளது.

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
*சந்தைப்படுத்தல் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

## அறிமுகம்

தமிழின் செழுமைக்கும், இனிமைக்கும் தமிழிலுள்ள இலக்கியங்களும், இலக்கண முறைகளும் அடிப்படையாக அமைந்துள்ளன. தமிழ் இலக்கணத்துக்கு ஆதாரசுருதியாக இற்றைக்கு 2000ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட தொல்காப்பியம் அமைகிறது. இலக்கியத்தின் சிறப்புக்கும், இனிமைக்கும் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை நூல்களும், பத்துப்பாட்டு நூல்களும் மட்டுமன்றி பதினொண் கீழ்க்கணக்கு நூல்களும் அடிப்படையானவை. ஐம்பெரும் காப்பியங்களான சிலப்பதி காரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி என்பவற்றோடு பல்லவர் காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்களின் பங்களிப்புக்களும் முதன்மையானவை. சிலப்பதிகாரம், பெரியபுராணம் ஆகிய இரண்டும் தமிழகத்தினை அடிப்படையாகக்கொண்டு எழுந்தவையாகும். தமிழ்க்காப்பியங்களின் வரலாறு சிலப்பதிகாரத்தி லிருந்துதான் ஆரம்பமாகின்றது. சங்ககாலத்தில் காப்பியங்கள் எதுவும் படைக் கப்படவில்லை. சங்க இலக்கியங்களிலே 782 அடிகளினைக் கொண்ட மதுரைக்காஞ்சியே நீண்ட படைப்பாக அமைந்துள்ளது.

சங்க இலக்கியத்துக்கு முற்பட்டது எனக்கருதப்படும் தொல்காப்பியத்தில் பெருங்காப்பியங்களுக்கான இலக்கணங்கள் எதுவும் கூறப்பட வில்லை. ஆனாலும், தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வனப்புக்களாகிய "தொன்மை, தோல்"போன்றவை காப்பியங்களினைக் குறிப்பதாகக் கருத்துகள் உள்ளன. காப்பியங்களுக்கான இலக்கணமுறைகள் தண்டியலங்காரத்தில் தெளிவுறக் கூறப்பட்டிருக்கின்றன. இந்நூலானது கி.பி. 940 - 1070 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் எழுதப்பட்டிருக்கலாம் என்பர். சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியங்களுக்குள் உள் வாங்கப்பட்டுள்ளபோதும், ஐம்பெருங்காப்பியம் என்ற வகைப்படுத்தல் எப்பொழுது மேற்கொள்ளப்பட்டதென்பது இன்றுவரை வினாவாகவே உள்ளது. இளங்கோவடிகளினால் எழுதப்பட்ட சிலப்பதிகாரமும், சீத்தலைச்சாத்தனா ரினால் எழுதப்பட்ட மணிமேகலையும் இரட்டைக்காப்பியங்கள் என அழைக்கப்படுகின்றன.

ஐம்பெருங்காப்பியங்களின் மூலபாத்திரம் பெண்களினை மையமாகக்கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. காப்பியங்களின் பெயர்கள் மாதர்கள் தமது அழகினை மெருகூட்டும் நோக்கில் அணியும் ஆபரணங்களின் பெயர்களினைப் பிரதிபலிப்பனவாகவே உள்ளன. சிலப்பதிகாரத்தில் வரும் சிலம்பு என்பது வனிதையர்கள் கால்களில் அணியும் அணிகலனையும், மணிமேகலை என்பது பெண்கள் தம் இடையில் அணிகின்ற அணிகலனையும், குண்டலம் என்பது மகளிர் தமது காதுகளில் அணிகின்ற தோட்டினை அல்லது காதுகளின் வளையலினையும், வளையாபதி என்பது கைகளில் அணிகின்ற வளையல்களினையும் குறிக்கின்றன. அத்துடன் சிந்தாமணி என்பது முடிக்குரிய வேந்தர்கள் முடியில் பதிக்கப்பட்ட மாணிக்கக்கல்லினையும் குறிக்கின்றது.

## சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்ட வணிகம் சிலப்பதிகாரம் ஓர் பார்வை

காப்பிய நாயகர்கள் வாழும் மனிதகுலத்துக்காக விட்டுச்சென்ற புதையல் சிலப்பதிகாரம். இது குடிமக்கள் காப்பியம், பாட்டிடையிட்ட தொடர்நிலைச் செய்யுள் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இறைவனையும், நாடாளுகின்ற அரசனையும் பாட்டுடைத்தலைவர்களாகக் கொண்டு காவியங்கள் வடித்த அக்காலத்தில், சிலப்பதிகாரம் அன்றைய மன்னர்களின் ஏகாதிபத்தியத்திற்குச் சவாலாக வணிககுலத்தினைச் சார்ந்த கோவலனைப் பாட்டுடைத்தலைவனாகவும், கண்ணகியைத் தலைவியாகவும் கொண்டு இயற்றப்பட்டது. இக்காவியம் வணிககுலத்தின் உரிமைக்குரலாக நோக்கப்படுகின்றது. ஏனெனில் சங்கமருவிய காலத்தில் மன்னர்களது நிலவுடமை அதிகாரத்தின் பேறாக பல்வேறு வரிகள் மற்றும் கட்டுப்பாட்டினை வணிகர்கள்மீது திணித்தனர்.

இதன்விளைவாக மன்னர்களின் ஏதேச்சதிகாரத்துக்கு எதிராகவும் வணிககுலத்தினர்களினை பாத்திரங்களாகக் கொண்டும், அரசகுல மரபில் வந்த இளங்கோவடிகளினால் எழுதப்பட்ட ஓர் சமத்துவ முழக்கமே சிலப்பதிகாரம். இது சமூக நீதி, சமய சமத்துவம், சமய நல்லிணக்கம் போன்றவற்றினைக் காட்சிப்படுத்துகின்ற ஓர் உன்னதமான படைப்பாகும். ஆனாலும், சிலப்பதிகாரம் சமணம் போற்றும் காப்பியம் என்ற வாதமும் உண்டு. ஏனெனில் இளங்கோவடிகள் ஒரு சமண சமயத்தவர் என்பதனால் சிலப்பதிகாரம் ஓர் சமண நூலாகவும் கொள்ளப்படுகின்றது.

(தொடரும்)

ஆர். பிரகாஷ்



# ஆபத்து நகர்கிறது

21 ஆம் நூற்றாண்டின் ஆபத்துகளில் ஒன்று என்று ஒரு பனிப்பாறை பிரகடனப் படுத்தப்பட்டிருக்கின்றது என்றால், அதை நம்ப முடிகின்றதா? நம்பித்தான் ஆக வேண்டும். விடயம் என்னவென்றால், அந்த ஆபத்து தற்போது நகர ஆரம்பித்திருக்கின்றது. அது மெல்ல மெல்ல பூமியை விழுங்கத் தயாராகின்றது.

வெண்பனிகளால் போர்க்கப்பட்ட அந்தாட்டிக்காவில், கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் பெரும் உடைவு ஏற்பட்டது. இந்த உடைவு மிகப்பிரமாண்டமான பனிப் பாறையொன்று தனியாக உருவாகக் (அந்தாட்டிக்காவில் இருந்து பிரிந்து) காரணமாகியது. 'ஏ-23' என்று பெயரிடப்பட்ட அந்தப் பாறை பிரிட்டனின் தலைநகர் லண்டனை விடவும், மூன்று மடங்குக்கும் மேல் பிரமாண்டமானது.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக நகராமலும், அசையாமலும் ஓரிடத்தில் நிலைபெற்றிருந்த அந்தப் பாறை தற்போது நகர ஆரம்பித்திருக்கின்றது என அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இனி கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பனிப்பாறை உருகி நீருடன் சங்கமிக்கும். இது முழுவதுமாக நிகழ்வதற்கு இன்னும் குறைந்தது 10 ஆண்டுகளேனும் ஆகலாம் என்கின்றனர் விஞ்ஞானிகள். ஆனால், பூமியின் வெப்பமாதலைக் கருத்திற்கொண்டால் ஐந்து முதல் பத்து ஆண்டுகளுக்குள் அந்தப் பாறை முற்றாக அழிந்தும் அமிழ்ந்தும் போவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதில் ஆபத்தான விடயம் என்னவென்று எம்மில் பலருக்கும் கேள்வி எழலாம். அதற்குத் தான் திகிலான விளக்கமொன்றை விஞ்ஞானபூர்வமாக எண்பித்திருக்கின்றனர் அறிவியலாளர்கள். இதன்படி, பிரமாண்டமான அந்தப்பாறை, தெற்குப் பெருங்கடலில் உள்ள சர்க்கம்போலார் என்ற நீரோட்டத்தால் இழுக்கப்பட்டே ஜோர்ஜியாவை நோக்கிப் பயணப்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சர்க்கம்போலார் நீரோட்டம் என்பது அறிவிக்கப்படாத ஓர் உலக அதிசயம். அந்தாட்டிக்காவில், ஒப்பீட்டளவில் சிறிது வெம்மையுள்ள ஒரு நீரோட்டம். அந்த நீரோட்டம் லண்டனைப் போன்று அளவில் மூன்று மடங்கு பெரியபாறையை நகர்த்துகின்றது என்றால், அதன் வலிமையையும், அந்தாட்டிக்காவில் ஏற்கனவே உடைந்து சிதறிப்போய், அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ள பாறைகளின் அழிவின் வேகத்தையும் சிவப்பு எச்சரிக்கையால் கோடிகாட்டுகின்றனர் விஞ்ஞானிகள். 21ஆம் நூற்றாண்டின் ஆபத்து என இந்தப் பாறை அறிவிக்கப்பட்டதன் பின்னணி இதுவே.

பூமியை நாம் எவ்வளவுக்கு எவ்வளவு குளிர்விக்கின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு இத்தகைய பேராபத்துகளில் இருந்து நாம் ஒதுங்கியிருக்கலாம். ஆனால், அணுவாயுதங்களும், எறிகணைகளும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளும், போர்க் களங்களும், துப்பாக்கிச் சன்னங்களும், தொழிற்சாலைகளும், பசுமை நீக்கமும் நிறைந்துள்ள இந்த உலகில், சர்க்கம்போலார் இன்னும் வேகமெடுக்கும் அது பனிப்பாறைகளின் அழிவுக்கு மூலகாரணமாக இருக்கும் என்பதே உண்மை. இங்கே அழிவது பனிப்பாறைகள் மட்டுமல்ல, துவாலு, இலங்கை, இந்தோனேசியா, சுமாத்ரா, நியூசிலாந்து, ஜப்பான் போன்ற தீவு நாடுகளும்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடந்த மாதம் பெய்த பெருமழையால் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. அந்த வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சிலரின் அனுபவங்கள் இவை.**

# வெள்ளம் மூடிய வாழ்வு



தர்ஷன் இராசரத்தினம்

**நிலாப்தீன் செயினப்**
**(மாணவி) சாவகச்சேரி மகிழங்கேணிக் கிராமம்**

நான் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் தரம் - 6 கல்விகற்கிறேன். கடந்த மாதம் பாடசாலை விடுமுறை விட்டது. நாம் விடுமுறையைக் குதூகலமாக அனுபவித்து வந்தபோது பருவமழை வழமைக்கு மாறாக அதிகளவில் பொழிந்தது. எமது மகிழங்கேணிக் கிராமம் கடலை மிக அண்மித்துள்ளது. சாதாரண மழைக்கே எமது குடிசை வீடுகளை வெள்ளம் ஆக்கிரமித்துவிடும். கல்லாலான வீடுகளில் வசிப்பவர்கள்கூட ஒவ்வொரு மாரிமழைக்கும் சிரமப்படுவார்கள். இம்முறை அதிகளவு மழை பெய்ததால் எமது குடிசைவீட்டுக்குள் நவம்பர் 25ஆம் திகதி வெள்ளம் புகுந்துவிட்டது.

வழமையாக வெள்ளம் வந்தால் அருகிலுள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் தங்கியிருப்போம். இம்முறை வாசிகசாலையிலும் ஒழுக்கு. அதனால் குடும்பமாக இடம்பெயர்ந்து கச்சாய் வீதியிலுள்ள சத்தியம்மன் பாடசாலையில் நான்கு தினங்கள் இருந்தோம். பாடசாலையில் எமது கிராமத்தைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டவர்கள் தங்கியிருந்தமையால் அனைவருக்கும் அங்கு குளிப்பதற்கான வசதிகள் இல்லை. அதனால் தினமும் வெள்ளத்தின் மத்தியில் வீட்டுக்கு அல்லது உறவுகள் வீட்டுக்கு வந்து குளித்துவிட்டு மீண்டும் பாடசாலைக்குச் செல்வோம். கிணறுகள் மற்றும் மலசலகூடங்களில் வெள்ளநீர் நிறைந்து பெரும் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்திவிட்டது. கிராமத்திலிருந்து வெள்ளநீர் கடலைச் சென்றடைய வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. அந்த வாய்க்கால் வழியாக கடல்நீர் பெருக்கெடுத்து வீடுகளை ஆக்கிரமித்திருந்தது. தற்போதுகூட எமது வீட்டு வளவுகள் சேறும் சகதியுமாகவே காணப்படுகின்றன. கொப்பி,புத்தகங்கள் நனைந்து விட்டன. தற்போது வெயிலில் காயவைத்தே அவற்றை மீட்டெடுத்துள்ளோம். பாடசாலையில் நான்கு நாள்கள் இருந்தபோது கிராம அலுவலர் உள்ளிட்டோர் எமக்கான உணவு வசதிகளை ஏற்படுத்தித் தந்திருந்தனர்.

**சந்திரகுமார் சுவித்தா**
**உப்புக்கேணி வீதி, பெரியமாவடி, சாவகச்சேரி.**

கடந்த 26 ஆம் திகதி எமது வீட்டிற்கு முன்பாகவுள்ள உப்புக்கேணிக் குளம் நிறைந்து அயலில் உள்ள சுமார் 75 வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது. அத்திபாரம் உயரமான வீடுகளுக்குள்கூட வெள்ளம் புகுந்து இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. நாமும் எமது இரண்டு பிள்ளைகளுடன் ஒரு வாரம் வேறொரு வீட்டில் தங்கியிருந்தோம். உப்புக்கேணிக் குளம் நிறைந்து, வெள்ள இடரில் சிக்கியிருந்தபோது சாவகச்சேரி நகரசபை மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலகம் ஆகியன வெள்ளத்தை அப்புறப்படுத்துவதில் பெரிதாக அக்கறை கொள்ளவில்லை. அதனால் நாம் இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபருக்கு அறிவித்தோம். அவர் உடனடியாக எமது கிராமத்திற்கு வருகை தந்து உழவியந்திரம் மூலம் குடியிருப்புகளைப் பார்வையிட்டிருந்தார். எமது இன்னலை அறிந்த அவர் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு ஊடாக உடனடியாக மூன்று நீர்ப்பம்பிகள் மூலம் குளத்துநீரை கச்சாய்க்கடலுக்குக் கடத்த நடவடிக்கை எடுத்தார். நீரைக் கடலுக்குக் கடத்த ஒரு தனியார் காணி உரிமையாளர் அனுமதி தந்த நிலையிலேயே அது சாத்தியமாகியிருந்தது. இரவு, பகல் எனத் தொடர்ந்து நான்கு தினங்கள் கண்விழித்து நீரைக் கடத்தித் தற்போது வீடுகளுக்கு வந்திருக்கிறோம்.



கிணறுகளுக்குள் வெள்ளநீர் புகுந்தமையால் கிணற்று நீரைப் பாவிக்கமுடியாத நிலை காணப்படுகிறது. அதனைப் பாவிப்பதால் தோல் ரீதியான பாதிப்புகள் ஏற்படுகின்றன. கிணற்று நீரில் குளிக்கக்கூட முடியாத நிலைமை காணப்படுகிறது. மாரிகாலம் என்பதால் கிணற்றை இறைத்துச் சுத்தப்படுத்தவும் முடியாதுள்ளது. மழை வெள்ளத்தில் அள்ளுப்பட்டு வந்த கழிவுகள் இப்போதும் உப்புக்கேணி வீதியில் தேங்கிக்கிடக்கின்றன. இதனால் சுகாதாரச் சீர்கேட்டை நாம் எதிர்கொள்கிறோம். முதலில் நகரசபை, நுளம்பு மருந்து அடித்து நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உப்புக்கேணிக் குளம் 50 வருடங்களுக்கு மேலாக உள்ளது. அது எந்தவித பராமரிப்பும் இன்றிக் காணப்படுகிறது. குளம் நிறைந்தால் மேலதிக நீர் கடலைச் சென்றடைய முன்னைய காலத்தில் வாய்க்கால் இருந்ததாகக் கூறப்படுகிறது. அது பின்னர் கட்டுமானப் பணிகளால் மூடப்பட்டது. சாவகச்சேரி நகரசபை மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலகம் ஆகியன எமக்கு நிரந்தர வாய்க்காலை ஏற்படுத்தித்தர உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.



**ராம்குமார் ஆனந்தகுமார்**
**கச்சாய் வீதி, சாவகச்சேரி.**



நான் கச்சாய்க்கடலில் சிறிய அளவில் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகிறேன். எனது மனைவி வீட்டிலிருந்து தையல் தொழில் செய்கிறார். இந்நிலையில் என்றுமில்லாதவாறு இம்முறை வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. எமது வீட்டின் பாதியளவிற்கு வெள்ளம் புகுந்துவிட்டது. எனது மனைவியையும் இரண்டு வயதுக் குழந்தையையும் யாழ்ப்பாணத்திலுள்ள மனைவியின் பெற்றோர் வீட்டிற்கு அனுப்பிவிட்டு நான் மாத்திரம் வீட்டில் இருந்தேன்.

மழை விடுவதாக இல்லை. இரவு மேசை ஒன்றின் மேல் நித்திரையின்றி ஏறியிருந்தேன். காலையில் நானும் எனது அப்பா வீட்டிற்குச் சென்றுவிட்டேன். பின்னர் நான்கு நாள்களின் பின்னர் வெள்ளம் ஓரளவு வற்றிய பின்னரே வீட்டிற்கு வந்தோம். எமது வீட்டுப் பொருள்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும், நனைந்தும் சேதமாகிவிட்டன.

வீட்டில் கோழி வளர்த்தோம். மழை வெள்ளத்தால் அதில் பல காணாமல் போய்விட்டன. அருகில் கடல் இருந்தும் வெள்ளம் கடலுக்குள் பாயவில்லை. வீட்டுத்தோட்டம் செய்தோம். அவையும் நீரில் மூழ்கி அழுகிவிட்டன. வெள்ளத்தால் 15 தினங்களாக கடற்றொழிலுக்குச் செல்லவில்லை. நிவாரணம் உள்ளிட்ட உதவிப் பொருள்களை வைத்தே சமாளித்து வருகிறோம். வெள்ளம் தேங்கியதால் குடிநீருக்குக் கூட நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது.

**சந்திரகுமார் ரஞ்சினி**
**மகிழங்கேணி சாவகச்சேரி.**

எமக்கு சஜித் பிரேமதாஸாவால் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. ஆனால் திட்டம் வழங்கப்பட்டு 5 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் முழுமையாகப் பணம் தரப்படவில்லை.

அதனால் நாம் வீட்டுக்கட்டுமானத்தை முடிக்க முடியாதுள்ளது. எனது கணவர் கூலி வேலையில் ஈடுபட்டு வருகிறார். இரு பிள்ளைகள் உள்ளனர்.



அண்மையில் பெய்த மழை காரணமாக எமது குடியிருப்பு முற்றாக வெள்ளத்தில் மூழ்கியது. இருப்பினும் நாம் இடம்பெயர்ந்து பாடசாலைக்குச் செல்லவில்லை. சமையலறைக்குள் வெள்ளம் புகுந்துவிட்டது. அதனால் நடு வீட்டில் வைத்து சமைத்து உண்டோம். உணவுக்குக்கூடப் பெரிதும் சிரமப்பட்டோம். சில தினங்கள் கிராம அலுவலராலும், சில தொண்டு நிறுவனங்களாலும் சமைத்த உணவு வழங்கப்பட்டது. வெள்ளப் பாதிப்பால் எமது மலசலகூடம் நிறைந்துவிட்டது. பிள்ளைகள் தொற்றுகளுக்கு இலக்காகி உள்ளனர். நீர்ச்சிரங்கு உள்ளிட்ட தொற்றுகள் கழிவுநீரால் அதிக பாதிப்பை ஏற்படுத்திவருகின்றன.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரலாற்று ஆய்வின் திருப்புமுனை ஒரிசா பாலு



கோகுலராகவன்

வரலாற்று ஆய்வாளர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்துதான் வரலாற்றை ஆய்வு செய்யவேண்டும் என்ற மரபை உடைத்தவர் ஒரிசா பாலு. இதில் துயரம் யாதெனில் அவரது ஆய்வுகள் உட்பிரகாரக் குருக்களால் வெறுப்பாகப் பார்க்கப்பட்டன. அத்துடன் கணக்கெடுக்கப்படாமலும் இருந்தன. இது பற்றி அவர் கவலைப்படவே இல்லை. ஒரிசா பாலு தன்னார்வத்தாலேயே இந்த ஆய்வுகளைச் செய்தாரே தவிர முனைவர் பட்டத்திற்காகச் செய்யவில்லை. தொழில்நுட்பப் பட்டதாரியான அவர் ஒரு தடவை ஒரிசாவுக்கு ஆமைகளில் ஆய்வுக்காகப் பொருத்தப்பட்ட தொழில்நுட்பக் கருவிகளில் ஏற்பட்ட பழுதைச் சீர்செய்வதற்காகப் போனார். அதன்போது ஆமைகளில் நீண்ட தூரம் கடற்பயணம் செய்யும் திறனைக் கண்டு இதற்கும் தமிழர்களின் கடற்பிரயாணத்திற்கும் தொடர்பு இருக்கலாம் என நம்பி அதை ஆய்வு செய்து நிரூபிக்க முயன்றார். அதில் சில உண்மைகளை வெளிப்படுத்தினார். ஆமை இனப்பெருக்கத்திற்காக நீண்ட தூரம் பயணம் செய்வதுடன் அதற்கு வசதியான கடற்கரையில் முட்டையிடும். இந்த ஆமைகளின் பயணப் பாதையை வைத்தே தமிழர்கள் வரலாற்றுக் காலம் தொடக்கம் தமது கடற்பிரயாணத்தை ஆரம்பித்து வெற்றிகண்டனர் என்பதே அவரின் ஆய்வு முடிவாக அமைந்தது. ஆமைகள் கரையேறி இனப்பெருக்கம்




செய்த இடங்களே அநேகமான துறைமுகங்களாக இருப்பதை அவர் உறுதியாக நம்பினார்.

ஒரிசாக் கடற்பகுதியில் இந்த ஆய்வை மேற்கொண்டதாலும் ஒரிசாவில் வாழ்ந்த தமிழர்களை ஒருங்கிணைத்து செயற்பட்டதாலும் அவர் " ஒரிசா பாலு" என அழைக்கப்பட்டார். "குமரிக்கண்டம்"என்ற லெமூரியாக் கண்டம் உண்மையானது என்பதில் உறுதியாக இருந்தார். குமரிக்கண்டம் கடலில் மூழ்கியபோது தப்பித்துப் போனவர்கள் உலகில் பல பகுதிகளில் இன்றும் வாழ்வதாக ஆய்வில் முன்வைத்தார். "மாந்தன்" தோன்றிய இடம் குமரி என்பதும், பாண்டியர்கள் முதல் முதலில் ஆட்சி செய்த இடம் கடலில் மூழ்கிய குமரிக்கண்டம் என்பதும் பாலுவின் முன்வைப்பு. இங்குதான் "சிவன்" எனும் பாண்டிய மன்னன் ஆட்சிசெய்தார். அதனாலேயே "தென்னாடுடைய சிவனே போற்றி" என்கிறோம் என்றார். குமரிக்கண்டம் இல்லை என்போர் அந்தக் கருத்தை நிரூபிக்கும் படி கேட்டார். 'இந்த ஆய்வைக் கரையிலே இருந்து செய்யமுடியாது. கடலிலே இறங்கிச் செய்யவேண்டும்' என்பது அவரது வேண்டுகோளாக இருந்தது. உலகிலுள்ள பல நாடுகளின் பெயர்கள் தமிழிலேதான் இருக்கின்றன என்பதை பல ஆதாரங்களைக் காட்டி நிரூபிக்கத் தொடர்ந்து முயன்று கொண்டிருந்தார்.

சிந்துவெளி நாகரிகம், கிரேக்க நாகரிகம் போன்றவற்றில் தமிழர்களின் ஊடுருவல் இருப்பதாக பல தடவைகள் வெளிப்படுத்தியிருக்கிறார். எகிப்தில் பாண்டியன் என்ற பெயருடன் அரசன் ஒருவர் ஆட்சி செய்ததை முன்வைத்தார்.

இது தமிழர்களின் கடல்வழிப் பயணத்தில் ஏற்பட்ட தொடர்பில் வந்தது என்பதைக் கூறினார். இது மட்டுமல்லாது கொரிய மொழியில் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்ச்சொற்கள் இருப்பதாக பாலுவின் ஆய்வில் நிரூபிக்கப்பட்டது. இவ்வாறு ஒரிசா பாலு மேற்கொண்ட ஆய்வுகள் ஆயிரக்கணக்கானவை.

கீழடி ஆய்வில் ஏற்பட்ட இடைத்தடங்கல்களைத் தீர்ப்பதற்கு கருத்தியல் ரீதியாகப் போராடி கீழடி ஆய்வை தமிழ் நாடு அரசு செய்வதற்கு மறைமுகச் செயற்பாட்டைத் துணிந்து நடத்தியவர். கீழடி ஆய்வு தமிழரின் தொன்மையை வெளிக்கொண்டுவரும் முக்கியமான தொன்மை இடம் என்பதையும் வெளிப்படுத்தியவர்.

அதைக் காணமுன் ஒரிசா பாலு புற்று நோயால் 2023இல் காலமாகிவிட்டார். தன் வாழ்நாள் முழுவதுமாக தமிழரின் தொன்மையைத் தேடி உலக நாடுகள் முழுவதுக்கும் நேரடியாகச் சென்றவர். அதில் வெற்றியும் கண்டவர். தமிழன் வாழும் வரை "ஒரிசா பாலு" என்கிற சிவசுப்பிரமணியின் பெயர் வாழும், வாழட்டும்.




கீழடி ஆய்வில் ஏற்பட்ட இடைத்தடங்கல்களைத் தீர்ப்பதற்கு கருத்தியல் ரீதியாகப் போராடி கீழடி ஆய்வை தமிழ் நாடு அரசு செய்வதற்கு மறைமுகச் செயற்பாட்டைத் துணிந்து நடத்தியவர். கீழடி ஆய்வு தமிழரின் தொன்மையை வெளிக்கொண்டு வரும் முக்கிய தொன்மை இடம் என்பதையும் வெளிப்படுத்தியவர்.

## உணர்ப்தினம்

இராகவன்

பாகம் 3

இண்டைக்கு வரைக்கும் நான் வாங்க விரும்பின ஒரு தீபாவளிக்கார்ட் எனக்குக் கிடைக்கவேயில்லை எண்டு போனகிழமை சொல்லியிருந்தன். அது ஏபோர் சைஸிலயிருக்கும். அதில முருகன் வேலும் மயிலுமாய் நிப்பார். அதை விரிச்சால் உட்பக்கம் உமாதேவியாரும் ஆறு தாமரைப் பூக்களில் தவழுற குழந்தைகளுமாயிருக்கும். அதைப் போலயொரு வடிவான தீபாவளிக்கார்ட்டை நான் இண்டைவரைக்குங் காணேல்ல. அப்ப அதின்ர விலை இருபது ரூபாவெண்டு நினைக்கிறன். ராஜேஸ்வரன் கடையிலதான் நான் அதைப் பாத்தன். அப்ப அதை வாங்கக் கையில காசிருக்கேல்ல. எப்பிடியும் அதை வாங்கிப்போடவேணுமெண்டு அடுத்தநாள் இருபது ரூபாவோட கடைக்குப் போனன். அந்தக்கார்ட் இருக்கேல்ல. அதுக்குப் பிறகு இரண்டு, மூண்டு தீபாவளி வந்துபோச்சுது. நான் அந்தத் தீபாவளிக்கார்ட்டை எதிர்பார்த்துப் போனன். அது வரயில்லை. கனகாலங் கழிச்சுத் தற்செயலாய் நெல்லியடி மொடேர்ன் ஸ்ரோரில அந்தக்கார்ட்டைப் பாத்தன். அப்ப நான் கம்பஸில படிச்சுக் கொண்டிருந்தனான். கம்பஸ் போக வெளிக்கிட்டு வரேக்குள்ளதான் அதைக்கண்டனான். அதுக்குள்ள 764 பஸ் வந்திட்டுது. திரும்பி வரேக்குள்ள வாங்குவம் எண்டிட்டு பஸ் ஏறியிட்டன். பின்னேரம் திரும்பி வரேக்குள்ள அதை வாங்குவம் எண்டு போனால் அதை ஆரோ வாங்கிக்கொண்டு போயிட்டினம். அண்டையிலயிருந்து இண்டைவரைக்கும் அந்தக்கார்ட் ஒருடமும் என்ர கண்ணில தட்டுப்படேல்ல. இப்பவும் அதை வாங்க ரெடியாயிருக்கிறன்.

09

1980 களிலயிருந்து 1990 கள் வரைக்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாக் காலத்தில் யாழ்ப்பாணத்திலயிருந்து உதயன், முரசொலி, ஈழநாடு, ஈழமுரசு எண்டு நாலு பத்திரிகையள் "நல்லூர்க்கந்தன் இரதோற்சவச் சிறப்புமலர்" எண்டு ஒரு பிரத்தியேகமான இணைப்பிதழை வெளியிடுவது வழக்கம். மற்றப் பேப்பரெல்லாங் கறுப்பு வெள்ளையில வெளியிட உதயன் மட்டும் நாலுகலரில அந்தச் சிறப்பு மலரை வெளியிடும். அதிலயும் ஸ்பெஷல் என்னெண்டால் உதயன் சிறப்புமலர் மட்டுந்தான் 'வீகே'யின்ர (வீ.கே.கனகலிங்கம்) கைவண்ணத்தில உருவான முருகன் ஓவியங்களோட வெளிவரும். இந்த 'வீகே'யின்ர கைவண்ணத்திலதான் வீரகேசரி பிரசுரமாக வெளிவந்த நாவல்களுக்கெல்லாம் அட்டைப்படங்கள் உருவாகின. 'வீகே' யின்ர ஓவியங்கள் தெய்வீகத் தன்மை வாய்ந்திருக்கும். தேர்த்திருவிழாவுக்கு முதல் நாளே உதயனில் "நாளை நல்லூர்க்கந்தன் இரதோற்சவச் சிறப்புமலர் வெளிவருகிறது, உங்கள் பிரதிக்கு முந்துங்கள்" எண்ட அறிவிப்பு முதலாவது பக்கத்தில் வெளிவரும். நான் அதை வாங்கிறதுக்கெண்டு காலமை வெள்ளண எழும்பி வீட்டிலயிருந்து வெளிக்கிட்டு நடந்து ராஜேஸ்வரன் கடைக்கு வந்திடுவன். உதயன் வரும் வரைக்கும் கால்கடுக்கக் காத்திருந்து முதல் ஆளா உதயனை வாங்கி அச்சுவாசமடிக்க அதை மணந்துகொண்டே இரதோற்சவச் சிறப்பு மலரில வந்திருக்கிற 'வீகே'யின்ர முருகப்பெருமானைக் கண்குளிரப் பாத்துப் பரவசப்படுகிறது ஒரு தனி அனுபவம். அதெல்லாமொருகாலம். இதில நான் குறிப்பிட்ட ஈழமுரசுக்கும் ஒரு வரலாற்று முக்கியத்துவமிருக்கு. இந்த ஈழமுரசு கொஞ்சக்காலம் வெளிவந்து பிறகு இடையில நிண்டிட்டுது. பிறகு முன்னைய ஈழமுரசுதான் ஈழநாதம் என மெல்லிய பச்சைக் கலர் போஸ்ரர் ஒட்டி எல்லா இடமும் விளம்பரப்படுத்தி ஈழநாதமா வரத்தொடங்கிச்சுது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையால் கடத்தப்பட்ட மாணவர்கள்

## விசாரணையில் வெளிவந்த திடுக்கிடும் தகவல்கள்



கே.வி.தவராசா

(சென்றவாரத் தொடர்ச்சி)

2019 ஆம் ஆண்டுடிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப் பட்டு 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி பிரதிவாதிகளுக்கு குற்றச்சாட் டுப் பத்திரம் கையளிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி அர சியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராயவே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. எனவே ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு சட்டமா அதிபரின் செயற்பாடுகளில் தலையிடவோ அல்லது சட்டமா அதிபருக்கு உத்தரவு வழங்கவோ முடியாது எனவே வழக்கு விசாரணைகளை இடைநிறுத்தும்படி ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டமா அதிபருக்கு வழங்கியுள்ள கட்டளை சட்டவலு வற்றதாகும்.




### சட்டமா அதிபருக்கு கட்டளையிட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அதிகாரமில்லை

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப் பட்ட குற்றச்சாட்டுப்பத்திரத்தில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட, கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க ஆகியோர் உள்ளிட்ட 14 பிரதிவாதிகளுக்கு எதிராக ஆட்கடத்தல் மற்றும் கொலைக் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் 2008,2009 ஆம் ஆண்டுகளில் கடத்தப்பட்டவர் களின் பெரும்பான்மையினர் தமிழர்கள் எனவும், கடத்தப்பட்டு திருகோணமலை கடற்படை முகாமில் தடுத்து வைத்து சிலரிடமிருந்து கப்பமாக பணம் கோரப் பட்டதாகவும் , பின்னர் அவர்கள் கொலை செய்யப்பட்டு சடலங்கள் சிதைக்கப்பட்டு வீசப்பட்டதற்கான சான்றுகள் உண்டென சட்டமா அதிபர் அறிக்கையொன்றை மன் றில் சமர்ப்பித்தார். இந்த வழக்கு தற்பொழுது நீதிமன் றத்தில் விசாரணைக்காக திகதி குறிப்பிடப்பட்டது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நீதித்துறைக்கு எந்த வகையிலும் அழுத்தம் கொடுக்கவோ வழிப்படுத் தவோ அல்லது பரிந்துரைக்கவோ அதிகாரமில்லை. 11 இளைஞர்கள் வெள்ளை வானில் கடத்தப்பட்டு காணா மல் போகச் செய்யப்பட்ட இந்த வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட கடற்படைச் சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும் கடற் படைப் பேச்சாளராகவும் பதவி வகித்த கொமாண்டர் டி. கே.பி. தசநாயக்க ஆகியோர் மீதான விசாரணைகளை நிறுத்துமாறு அறிவித்துள்ளமை நீதித்துறையின் சுயா தீனத்தில் தலையிடும் சட்டரீதியற்ற செயற்பாடாகும்.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள விசேட ரயல் அட் பார், மேல் நீதிமன்றின் செயற்பாடுகளில் தலையீடு செய்ய முடியாது என்பதுடன் சட்டத்தின் பிரகாரம் , ஜனா திபதி விசாரணை ஆணைக்குழு போன்ற ஒரு ஆணைக் குழு எடுக்கும் முடிவு அல்லது நிலைப்பாட்டை நீதிமன்றம் சாட்சியாக ஏற்றுக் கொள்ளமுடியாது. அது குறித்து சுயாதீன நீதிமன்றக் கட்டமைப்புக்குள் விசாரிக்கப்படல் வேண்டும். விசேட ரயல் அட்பார் மேல் நீதிமன்றம் கடந்த 2019 ஆம்ஆண்டு டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி பிர தம நீதியரசரால் நியமிக்கப்பட்டுள்ளது. எனினும் ஜனா திபதி விசாரணை ஆணைக்குழு 2020 ஜனவரி மாதம் 9 ஆம் திகதியே ஸ்தாபிக்கப்பட்டது. அப்படியிருக்கை யில் நீதிமன்றின் செயற்பாடுகளை நிறுத்த ஆணைக்கு ழுவுக்கு அதிகாரமில்லை. மேல் நீதிமன்றங்களின் செயற்பாடுகளை நிறுத்துதல் தொடர்பாகத் தீர்மானம் எடுக்க உயர் நீதிமன்றத்தினால் மட்டுமே முடியும்.

கரன்னகொடவும் கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தசநா யக்கவும் 'எங்களை அரசியல் ரீதியாக பழிவாங்கும் நோக்கத்திலேயே, கொழும்பில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 11 இளைஞர்களின் வழக்கில் எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட் டுள்ளது. எனவே ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை முடியும்வரை குற்றப்பத்திரம் கைய ளிப்பதை இடைநிறுத்தி வைக்கவேண்டும். அவ்வாறில்லாமல் குற்றப்பத்திரங்களை நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு கைய ளித்து வழக்கை நடத்துமானால் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படலாம்' என்ற வாதத்தை முன்வைத்தனர்.

### தேசிய பாதுகாப்பும் கப்பம் கோரப்பட்ட கொலைகளும்

இந்த வழக்கு விசாரணையில் தேசிய பாதுகாப்புடன் தொடர்பு டைய இரகசியத் தகவல்கள் வெளிப்படுமாயின் அரசமைப்பின் 106(3) ஆம் உறுப்புரைக்கமைய அவ்வாறான தகவல்கள் குறித்து இடம்பெ றும் சாட்சி விசாரணைகளை இரகசிய முறையில் முன்னெடுக்க கட்டமைப்பு உள்ளது. மேலும் இந்த வழக்கு, தேசியப் பாதுகாப்புடன் தொடர்புபட்டதா என்ற வாதம் முன்வைக்கப்பட்டமைக்கு முக்கியமான காரணம் இந்த வழக்கில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப் பட்ட குற்றச்சாட்டுப் பத்திரத்தில் எதிரிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் கடற்படைப் பிரதானியான வசந்த கரன்னாகொடவும் அவரது கட்டளையின் பிரகாரம் செயல்பட்ட கடற்படையினரும் தான். உள்நாட்டு யுத்தத் தின் இறுதிக் காலத்தில், அதாவது 2008 ஆம் ஆண் டின் இறுதிக் காலங்களிலும் 2009 ஆம்ஆண்டின் முற்பகுதியிலும்தான் கொழும்பில் இளைஞர் கடத்தப் பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர். ஆட்கொணர்வு மனு விசாரணையில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர் களின்பெற்றோரிடம் தலா ஒருகோடி ரூபா கப்பம் கோரி யுள்ளனர். இதுபற்றி இந்த வழக்கு விசாரணையில் பெற்றோர் சாட்சியமும் அளித்துள்ளனர். தேசியப் பாது காப்புக்கும் கப்பம் கோரப்பட்டு கொலை செய்யப்பட்ட விடயத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை.

### மேல் நீதிமன்ற வழக்கை இடைநிறுத்திய உயர் நீதிமன்றம்

நான் நிசாந்த சில்வாவின் சாட்சியத்தை நெறிப்படுத்து கையில் நிசாந்த சில்வா தனது சாட்சியத்தில் கடத்தப்பட் டவர்களுக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் எந்தத் தொடர்பும் அற்றவர்களெனத் தெரிவித்துள்ளார். சட்டவிரோதச் செயல்களைச் செய்துவிட்டு தேசியப் பாதுகாப்பைக் கார ணங்காட்டி குற்றவாளிகள் தப்பித்துப் போக எந்தக்கார ணங்கொண்டும் சட்டம் இடமளிக்கக் கூடாது. இதுதான் நமது நீதித்துறை மீது நாம் கொண்டிருக்கும் இறுதி நம் பிக்கையை உயிர்ப்போடு இருக்கச் செய்வதாக அமை யும்.

எனினும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன் னாகொட உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்ததைய டுத்து உயர் நீதிமன்றம் மேல் நீதிமன்றில் நடைபெற்றுக் கொண்டிருந்த வழக்கை இடைநிறுத்த உத்தரவு வழங்கி யுள்ளது. அதன் பின்னர் வசந்த கரன்னாகொட வடமேல் மாகாண ஆளுநராக 2021 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி கோத்தாபயவினால் நியமிக்கப்பட்டார். சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி யுத்தத்தின் இறுதிக் காலகட்டத்தில் உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் எந்தவி தமான தயக்கமுமின்றி துணிந்து இந்த ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்யாமல் விட்டிருந்தால் இங்கு பேசப்பட்ட அத்தனை உண்மைகளும் சாட்சியங்களே இல்லாமல் மறைந்து போய் இருக்கும்.

(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)



மயூ

# வலையில் சிக்கும் மீனவர்கள்

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியா சென்று திரும்பியிருக்கும் நிலையில், இருநாட்டு மீனவர் பிரச்சினை மீண்டும் பேசுபொருளாகியிருக்கின்றது. இந்தி யப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த பின்னர் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, "இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மேலும் மேம்பட வேண்டும். இரு நாடுகளுக் கும் தொல்லையாக மாறியுள்ள மீனவர் பிரச்சினைக்கு நீடித்த மற்றும் நிலையான தீர்வைக் காண விரும்புகிறோம். இலங்கையை ஒட்டிய இந் திய பகுதியில் இழுவைப் படகுகள் மூலம் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. அந்தப் பகுதியில் உள்ள மீனவர்கள் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஏனெனில், அது இந்தத் தொழிலுக்கு அழிவை ஏற்படுத்தும்" என்று கூறியிருக்கும் நிலையில், தமிழக மீனவர்களிடையே இந்தக் கருத்து அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது என்று தெரிகின்றது.

இந்தக் கடல் எல்லைப் பிரச்சினையில் இந்திய மத்திய மற்றும் மாநில அரசுகள் அக்கறையற்று இருக்கின்றன என்று கருதுகின்றனர் தமிழக மீனவர்கள். '1983ஆம் ஆண்டு இலங்கையில் இனக்கலவரம் ஆரம் பித்த பின்னர்தான் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் ஆரம்பமா கின. இந்திய மத்திய அரசு ஆரம்பத்திலேயே அதைச் சரி செய்ய நடவ டிக்கை எடுத்திருக்கவேண்டும். ஆனால் இந்திய மத்திய அரசு அலட்சியம் காட்டியதாலேயே கச்சதீவு இலங்கையின் பக்கம் சென்றது. மீன் கிடைக் காத பல நேரங்களில் எல்லையைத் தாண்டும் சூழல்தான் உள்ளது. இதற்கு மிகவும் குறைவான தொலைவு இருப்பது மட்டுமே காரணம்' என்கின்றனர் தமிழக மீனவர்கள்.

'தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான 100க்கும் மேற்பட்ட படகுகளை இலங்கை சிறை பிடித்து வைத்திருக்கிறது. அவற்றின் விலைகள் பல லட்சங்கள். பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தபோதும், மாநில அரசு அக்கறையற்றிருக்கின்றது. படகுகளை பறி கொடுத்தவர்கள் பசியும், பட்டினியுமாக இருக்கின்றனர். 14 மாவட்டங்களில் மீனவர்கள் அடர்த்தியாக மீன்பிடித் தொழில் செய்து வரும் நிலையில், போதுமான இடமோ, மீன்வளமோ இல்லை' என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் தமிழக மீனவர்கள் என்ன காரணங்களைக் கூறினாலும், தமி ழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியால் இலங்கையின் வடக்கு மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்பதை எவரும் மறுக்க முடியாது. நீண்ட போரின் பின்னர் பல்வேறு இழப்புகளின் பின்னர் பூச் சியத்தில் இருந்து தங்களின் வாழ்க்கையை ஆரம்பித்திருக்கும் வடக்கு மீனவர்களுக்கு, இந்திய இழுவைப் படகுகளின் வருகை பெரும் தலை வலியாகவே மாறியிருக்கின்றது. இந்திய இழுவைப் படகுகளால் வடக்கு மீன் வளம் அள்ளிச் செல்லப்படுவதும், அவர்களின் வாழ்வாதார மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்படுவதும் தொடர்கதையாகவே இருக்கின் றது. அதேவேளை, இந்தவிடயத்தில் இந்திய மத்திய, மாநில அரசுகள் அக்கறையற்றிருக்கின்றன என்ற குற்றச்சாட்டையும் மறுப்பதற்கில்லை. அதில் இலங்கையையும் சேர்த்துக்கொள்ளவே வேண்டும். இந்திய மத் திய அரசும், மாநில அரசும், இலங்கை அரசாங்கமும் இந்தவிடயத்தை இதுவரையில் இதயசுத்தியுடன் அணுகவில்லை என்றே கூறவேண்டும். தங்களின் அரசியல் ஆதாயங்களுக்காக இருநாட்டு மீனவர்களிடையே பிரச்சினை தீராவண்ணம் அவர்கள் பார்த்துக்கொண்டார்கள் என்றே கூறவேண்டும். ஆனால் இந்தப் பிரச்சினையை நீடிக்க விடுவது இருநாட் டுக்கும் ஆரோக்கியமற்றது என்ற உண்மையை இரு நாடுகளுமே ஏற் றுக்கொள்ளவேண்டும்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இலங்கை ஜனாதிபதி அநுரகு மார திஸாநாயக்க ஆகியோர் சந்தித்தபின்னர் வெளியிட்ட கூட்டறிக்கை யில் இரு தரப்பு மீனவர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஏற்றுக் கொண்டு, வாழ்வாதாரநிலையைக் கருத்திற் கொண்டு, மனிதாபிமான முறையில் இவற்றைத் தொடர்ந்து தீர்க்க வேண்டும் என்று குறிப்பிட் டுள்ளனர். அறிக்கைகளை வெளியிடுவதுடன் நின்றுவிடாது இருநாடுக ளும் இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பதற்குரிய வழிமுறை களைக் கண்டறிய முயலவேண்டும். அதைவிடுத்து, இந்தப் பிரச்சினையை நீடிக்க விடுவது இருநாடுகளுக்கும் இடையிலான உற வில் விரிசலை உண்டாக்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

சுந்தரலிங்கத்தின் யோசனை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. 1951 ஆம் ஆண்டு நான் இந்தக் கொடியின் கீழ் இருக்கமாட்டேன் என்று கூறி தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார் சுந்தரலிங்கம். நடேசனும் தேசியக்கொடியை வடிவமைக்கும் குழுவில் இடம்பெற்றிருந்தார். அவரும் தேசியக்கொடியை வடிவமைக்கும் குழுவிலிருந்து விலகிக்கொண்டார்.


பின்னர் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டி நாடாளுமன்றம் சென்றபோது பண்டாரநாயக்கா தேசியக்கொடியை காட்டி பறந்துகொண்டிருக்கிறது என சைகையால் சொன்னார்.

11

சுந்தரலிங்கமும் சைகையால் 'இறக்கத்தான் வந்திருக்கிறேன்' எனப் பதிலளித்தார். 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்து தமிழர்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டிவிட்டபோது பண்டாரநாயக்காவுக்கு எழுதிய கடிதத்தில் "உனது இரட்டை நாக்குப் பற்றி தேசியக்கொடியை வடிவமைத்தபோதே சந்தேகப்பட்டேன், நான் சந்தேகப்பட்டது சரி தான்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமருக்கு எழுதிய கடிதத்திலும் My Dear Prime Minister ( அன்பின் பிரதமர்) என்றே சுந்தரலிங்கம் குறிப்பிட்டுள்ளார். Sir. Honoruble போன்ற வார்த்தைகளை சுந்தரலிங்கம் பாவிக்கவில்லை.





T. வாகீஸ்
தரம் - 6
யா/கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்



தி.பிரியந்தகி
தரம் - 9
யா/இந்து மகளிர் கல்லூரி




கே.பவித்ரன்
தரம் - 11
யா/ மத்திய கல்லூரி




சி பிரவீன்
தரம் - 7D
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி



ம.சுஜிற்
தரம் - 8H
யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



T.டனுஷ்கா
தரம் - 6B
யா/உடுவில் மகளிர் கல்லூரி




கம்சியா
தரம் -4A
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி



ய.கிஷானி
தரம் - 07D
யா/திருக்குடும்பக் கன்னியர்மடம் தேசிய பாடசாலை

## மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org